# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 14 வள்ளுவர் ஆண்டு 2030 புரட்டாதி 11 செவ்வாய்க்கிழமை (28-09-1999) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 262


## கொலைகளைக் கண்டித்ததற்காக
## ஐ. நா. மீது கதிர்காமர் பாய்ச்சல்!
### செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவையும் சாடுகின்றார்

நியூயோர்க், செப். 28

இலங்கையின் உள் விவகாரங்கள் தொடர்பாக ஐ. நா. அதிகாரிகள் கருத்துக் கூறுவதை ஒருபோதும் அனுமதிக்க முடியாது என்று வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் காட்டமாகத் தெரிவித்துள்ளார்.

அண்மையில் புதுக்குடியிருப்பிலும், அம்பாறையிலும் அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்ட சம்பவங்கள் தொடர்பாக ஐ. நா. தரப்பில் இருந்தும் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினாலும் வெளியிடப்பட்ட கருத்துக்களைக் கண்டித்து — கடுமையாகச் சாடி — நியூயோர்க்கில் இருந்து வெளியிட்ட ஓர் அறிக்கையிலேயே கதிர்காமர் மேற்கண்டவாறு கூறியிருக்கிறார்.

அமைச்சர் கதிர்காமரின் அந்த அறிக்கையை அரசு சார்பு 'டெய்லி நியூஸ்' பத்திரிகை நேற்று அதன் முதற் பக்கத்தில் வெளியிட்டிருந்தது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## சாரதி, நடத்துநர் தலைமறைவு

கொழும்பு, செப். 28

பதுளை நகரப் பகுதியில் நேற்று முன்தினம் குண்டு வெடிப்புக்கு இலக்கான பஸ்ஸின் சாரதியும் நடத்துநரும் தலைமறைவாகிவிட்டதாக பதுளைப் பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

குண்டு வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றதை தொடர்ந்து பஸ்ஸின் சாரதியான எம். கே. சோமவன்சவும், நடத்துநரான ஒமிக்க மிகிரவும் தப்பியோடி தலைமறைவாகிவிட்டனர் எனவும் — தப்பியோடிய இருவரையும்

(10ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளுடன் உடன் பேச்சு நடத்த அரசை வற்புறுத்துகின்றார் ரணில்!

## பிரிட்டிஷ் தலைவர்களும் அதையே வலியுறுத்தினர் என்கிறார் அவர்

### லண்டனில் இருந்து திரும்பியதும் உதயனுக்குப்பேட்டி

கொழும்பு, செப்ரெம்பர் 28

"விடுதலைப் புலிகளுடன் அரசாங்கம் உடனடியாகப் பேச்சு நடத்த வேண்டும் என்றே நாம் கோருகின்றோம்."

"புலிகளையும் உள்ளடக்கியதான பேச்சுகள் மூலமே இலங்கை இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணமுடியும் என்று பிரிட்டிஷ் தலைவர்களும் வலியுறுத்தினர்."

பிரிட்டிஷ் விஜயத்தை முடித்துக் கொண்டு கடந்த சனியன்று நாடு திரும்பிய எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்று உதயனுக்கு வழங்கிய செவ்வி ஒன்றில் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தப் பேட்டியில் தமது லண்ட விஜயம் குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

லண்டனில் தங்கியிருந்த சமயம் வெளிவிவகார அமைச்சர் பீற்றர் ஹைலன்ஸ், நீதி அமைச்சர் வோட் ஏவின் பிரிட்டிஷ் எதிர்க்கட்சித் தலைவரும் கன்சர்வேட்டிவ் கட்சியின் தலைவருமான வில்லியம் ஹேட் ஆகியோருடன் பேச்சுக்கள் நடத்தினேன்.

இலங்கை ஜனாதிபதிக்கும் எனக்கும் இடையில் 97 ஆம் ஆண்டு உடன்பாடு ஒன்று எட்டப்படுவதற்குக் காரணமாக இருந்த பிரிட்டனின் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லியம் பொக்ஸையும் சந்தித்துப் பேசினேன்.

'இலங்கை இனப்பிரச்சினைக்கு யுத்தம் மூலம் தீர்வு காணமுடியாது. பேச்சுவார்த்தை மூலம் எட்டப்படும் அரசியல் பரவலாக்கல் மூலமே நிரந்தரத்தீர்வு காண முடியும். அந்தப் பேச்சுக்களில் விடுதலைப் புலிகளும் இடம்பெற வேண்டியது அவசியம். அவர்களை வெளியில் விட்டு நடத்தப்படும் பேச்சுக்களால் பலன் ஏதும் கிடைக்கப் போவதில்லை — என்று

(10 ஆம் பக்கம் பார்க்க)

## கொக்குவில் பகுதியில் நேற்று மாலை கிரனேட் வீச்சு

யாழ்ப்பாணம், செப். 28

கொக்குவில் பகுதியில்—யாழ். மருத்துவ பீடத்துக்கு முன்பாக — கோணாவளை வயிரவர் கோயிலுக்கு அருகே— நேற்று மாலை 6.30 மணியளவில் இடம்பெற்ற கிரனேட் வீச்சுச் சம்பவத்தில் படையினர் சிலர் சிக்கியதாகத் தெரியவருகிறது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## மகாஜனா மாணவன் மிதிவெடியில் காயம்
### நேற்றுக் காலை சம்பவம்

யாழ்ப்பாணம், செப். 28

யாழ்ப்பாணம் — காங்கேசன்துறை வீதியில் தெல்லிப்பழை இராணுவத் தடை முகாமுக்கு அருகில் — மேற்குப் பக்கமாக — கடந்த வெள்ளிக்கிழமை மக்கள் பாவனைக்கு அனுமதிக்கப்பட்ட வெள்ளை வாய்க்கால் பாதையில் நேற்று இடம்பெற்ற மிதிவெடிச் சம்பவத்தில் மாணவன் ஒருவர் காயமடைந்தார்.

தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி ஆண்டு 8 மாணவனான ஜெகன் பரமேஸ்வரன் (வயது 13) என்பவரே இந்தச் சம்பவத்தில் கையிலும் காலிலும் காயமடைந்தார்.

மக்கள் பாவனைக்காக இந்தப் பாதை திறக்கப்பட்ட

[10 ஆம் பக்கம் பார்க்க]

## அடுத்து வலி. வடக்கில் மிதிவெடி அகற்றும் பணி

யாழ்ப்பாணம், செப். 28

ஐ, நா. அபிவிருத்தித்திட்டத்தின் ஏற்பாட்டில் சிம்பாப்வே நிபுணர் குழுவினால் அடுத்த கட்டமாக வலி வடக்குப் பகுதியில் மிதிவெடிகள் அகற்றும் பணி ஆரம்பிக்கப்படவுள்ளது.

முதற் கட்டமாக மேற்கொள்ளப்பட்ட மீட்புப்பணியில் கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரி, யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடம் ஆகியனவற்றின் மைதானங்களில் புதைக்கப்பட்டிருந்த 525 மிதி வெடிகள் சிம்பாப்வே நிபுணர்குழுவினால் அகற்றப்பட்டன.

மிதிவெடிகள் அகற்றப்பட்ட பின் இந்த இரு மைதானங்களும் உரியவர்களிடம் ஐ. நா, அபிவிருத்தித்திட்டத்தினால் உத்தியோக பூர்வமாக கையளிக்கப்பட்டுள்ளன

அடுத்து வலிவடக்கு பகுதியில் மிதிவெடிகள் அகற்றும் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

மோப்ப நாய்களின் உதவி

(10 ஆம் பக்கம் பார்க்க)

# முல்லைத்தீவுகடலில் உக்கிரசண்டை!
# சீனச் சரக்குக் கப்பல் பலத்த சேதம்!!

## படைத்தரப்பும் புலிகளும் மாறி மாறி குற்றச்சாட்டு

முல்லைத்தீவுக் கடலுக்கு அப்பால் சனிக்கிழமை இரவு முதல் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை வரை-சுமார் 6 மணித்தியாலங்களாக - கடற் படையினருக்கும் கடற் புலிகளுக்கும் இடையே கடும் மோதல்கள் இடம்பெற்றிருக்கின்றன.

இந்த மோதலின்போது கடற் பகுதியில் சென்றுகொண்டிருந்த சீன நாட்டு சரக்குக்கப்பல் ஒன்று பலத்த சேதமடைந்தது.

இந்தக் கப்பலை விடுதலைப் புலிகளே தாக்கியதாகப் படைத் தரப்பும் கடற்படையினரே தாக்கியதாக விடுதலைப் புலிகளும் மாறிமாறிக் குற்றஞ் சாட்டி உள்ளனர்.

( 10 ஆம் பக்கம் பார்க்க)

## சீன அதிகாரிகள் திருமலை விரைவு

கொழும்பு, செப். 28

முல்லைத்தீவுக்கடலில் தாக்குதலுக்கு இலக்காகிப் பலத்த சேதமடைந்த சரக்குக் கப்பலைப் பார்வையிடவும் இச் சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்தவும் சீன நிபுணர்களின் குழு ஒன்று கடற்படை அதிகாரிகள் சகிதம் திருமலைக்குச் சென்றுள்ளனர்.

கப்பலில் இருந்து மீட்கப்பட்ட மாலுமிகளை கொழும்புக்கு அழைத்து வரவும்—

(10 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகாஜனா..

(முதலாம் பக்கத் தொடர்)

பின்னர் நேற்று மாணவர்கள் அந்தப் பாதையூடாக மகா ஜனாக் கல்லூரிக்குச் சென்றனர்.

பிரஸ்தாப மாணவன் மற்றொரு மாணவன் சகிதம் ஆசிரியர் ஒருவருடன் மோட்டார் சைக்கிளில் சென்ற சமயம் மோட்டார் சைக்கிள் மிதி வெடியில் சிக்கியதில் காயமடைந் தார் என்று தெரிவிக்கப்பட்டது.

காயமடைந்த மாணவன் யாழ். ஆஸ்பத்திரியில் அனு மதிக்கப்பட்டுள்ளார்.

இவருடன் மோட்டார் சைக்கிளில் சென்றவரான ஜெயானந்தராஜா ஜெயப்பிரியந்தன் (வயது 13) என்பவரும் சிறுகாயங்களுக்குள்ளானார்.

மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்ற ஆசிரியர் காயமின்றித் தப்பினார். [ஐ-3-15-7]

## கொக்குவில்...

(முதலாம் பக்கத் தொடர்)

அந்தப் பகுதியில் ரோந்து சென்ற படையினர் மீது இரண்டு கிரனேட்டுக்கள் வீசப்பட்டதாகவும்—

அதில் படையினர் இருவர் கொல்லப்பட்டதாகவும்—

ஒரு தகவல் தெரிவித்தது. எனினும் அதை உறுதிப்படுத்த முடியவில்லை.

சம்பவம் இடம்பெற்ற கையோடு விரைந்து வந்த படையி னர் அந்தப் பகுதியைச் சுற்றிவளைத்துத் தேடுதல் நடத்திய தாகவும் தெரியவந்தது. (ஐ-7-16)

## கொலைகளை...

(முதலாம் பக்கத் தொடர்)

ஐ. நா. — மலேரியாவைப் பற்றியும், நுளம்புகளைப் பற் றியும் கவலைப்பட வேண்டுமே தவிர தனக்குள்ள அதிகாரங் களை விரிவுபடுத்த முயற்சிக்கக் கூடாது.

அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தைத் தவிர ஐ. நா. வின் ஏனைய பிரிவுகள் மற்றும் அதன் அலுவலர்களை சமூக மற்றும் பொருளாதாரப் பணிகளில் ஈடுபட மட்டுமே அனு மதித்துள்ளோம். உள்நாட்டு விவகாரங்கள் தொடர்பாகக் கருத்து வெளியிட அவர்களை அனுமதிக்க மாட்டேன். நான் தற்சமயம் கொழும்பில் இருந்திருந்தால் அந்த அமைப்பை (ஐ. நாவை) கடுமையாகக் கண்டித்திருப்பேன் — என்று அமைச்சர் கதிர்காமர் தெரிவித்துள்ளார்.

புதுக்குடியிருப்பு மற்றும் அம்பாறைச் சம்பவங்களைத் தொடர்ந்து செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு வெளியிட்ட கருத்துக்களுக்காக அந்த அமைப்பையும் கதிர்காமர் சாடியுள் ளார்.

புதுக்குடியிருப்பு விமானத் தாக்குதல் சம்பவம் தவறுத லாக இடம்பெற்றது. ஆனால் புலிகள் செய்தது அப்படி யல்ல.

இவ்விரு சம்பவங்களையும் தொடர்புபடுத்தியதன் மூலம் செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு தவறிழைத்துவிட்டது.

இந்தியாவில் கூட செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு செயற் பட அனுமதிக்கப்படவில்லை. இலங்கையில் அது சிறப்பாகப் பணியாற்றி வருகிறது. ஆனால் அவர்கள் தமது பாதையில் சரிவரப் பணியாற்றுவதைத் தாங்களாகவே உறுதி செய்து கொள்ள வேண்டும். அதை விடுத்து உள்விவகாரங்களில் கருத்துக் கூற முயலக் கூடாது. அவர்கள் தவறாக நடந்தால் அவர்களை அவர்களது வழிக்குக் கொண்டுவர வேண்டியிருக் கும் — என்று கதிர்காமர் தெரிவித்திருக்கிறார். (ஐ)


# 52 ஆவது அகவை வாழ்த்துப்பா

**உயர்திரு கணபதி இராசதுரை**

(அதிபர், யாழ். மத்திய கல்லூரி)

அவர்கள்

பூந்தமிழர் பண்பாடும் பண்பும் ஓங்கும்
புகழ் பூத்த மந்துவில் கணபதியார்
காந்தமிகு சின்னப்பிள்ளை தம்பதிகள் ஈன்றெடுத்த
கல்விமான் இராசதுரை யாழ்ப்பா ணத்து
பாந்தமிகு மத்தியகல் லூரி தன்னில்
பக்குவஞ்சேர் அதிபராகச் செய்யும் சேவை
ஏந்தலென ஆக்கிவைக்கும் இன்று போல
என்றென்றும் இன்பமுடன் வாழி! வாழி!

ஆக்கம்; ''மஹாவித்துவான்''
பிரம்மஸ்ரீ N. வீரமணி ஐயர்

பிரதி/ உப அதிபர்கள்
ஆசிரியர்கள், ஆளணியினர்
மாணவர்கள்.

28-9-99 (சி/9108)



# இந்துருவலி கப்பலில் பொருள்கள் ஏற்றும் வர்த்தகர்களின் கவனத்துக்கு

யாழ்ப்பாணத்திலிருந்து திருகோணமலை மற்றும் கொழும்புக்கு விவசாய உள்ளீட்டுப் பொருள்களுடன் வேறு ஏனைய பொருள்களையும் ஏற்றுபவர்கள் 05-10-1999 ஆம் திகதிக்கு முன்னர் கீழ்க்காணும் முகவரியுடன் தொடர்பு கொள்ளலாம்.

**வேல் ரேட் சென்ரர்**

இல. 114, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 2822.

(சி/9094)


## கையுறை, காலணி தரக்கோரி

# சுத்திகரிப்புப் பணியாளர்கள் நேற்று வேலை நிறுத்தம்

யாழ்ப்பாணம், செப். 28

சுத்திகரிப்பு வேலைகளின் போது அணியும் கையுறை கள் மற்றும் சப்பாத்துகள் என்பனவற்றைத் தமக்கு வழங்குமாறு கோரி நேற்று யாழ். மாநகர சபை, சுகா தாரப் பகுதி சுத்திகரிப்பு ஊழியர்கள் வேலை நிறுத் தப் போராட்டத்தில் ஈடுபட் டனர்.

நேற்றுக் காலை 10 மணி யளவில் யாழ். ஆஸ்பத்திரி வீதியில் — மணிக்கூட்டு வீதிப் பகுதியில் — சுமார் 15 ஊழி யர்கள் இந்த வேலை நிறுத் தத்தில் ஈடுபட்டிருந்தனர்.

யாழ். ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள நீர்வடியும் பிரதான கால்வாயில் தாங் கள் கடந்த ஒரு வாரகால மாக சுத்திகரிப்புப் பணியில் ஈடுபட்டு வருவதாகவும் —

சேறும் சகதியுமாக உள்ள — அழுக்கு நீர் — செல்லும் அந்தக் கால்வாயைத் தாங் கள் கையுறைகள், காலணி கள் அணியாமலேயே சுத்தி கரித்து வருவதாகவும் —

அதனால் தமக்கு சிரங்கு மற்றும் தொற்றுநோய்கள் ஏற்பட்டுள்ளதாகவும்—

வேலை நிறுத்தத்தில் ஈடுபட் டிருந்தவர்கள் தெரிவித்தனர். (ஐ-9-ரி)

## சாரதி, நடத்துநர்...

[முதலாம்பக்கத் தொடர்]

தேடி வருவதாகவும்— பொலீ ஸார் தெரிவித்தனர்.

இதேவேளை—

மேற்படி குண்டு வெடிப்புச் சம்பவத்தில் காயமடைந்த 31 பேரில் 5 பேரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாக வும் இவர்களில் வவுனியா இராணுவ முகாமில் பணி யாற்றும் இராணுவ வீரர் ஒருவரும் அடங்குவார் என வும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பஸ் குண்டு வெடிப்பில் பலியான நபர் மட்டக் களப்பு — வாழைச்சேனைக் கண்ணன் கிராமத்தைச் சேர்ந்த பொன்னுத்துரை புஸ்பராஜா [வயது 20] என அடையாளம் காணப்பட்டுள் ளார் எனவும்—

இவரது தேசிய அடையாள அட்டையில் பிறப்பிடம் லுணுகல எனக் குறிப்பிடப் பட்டுள்ளதாகவும்—

மேற்படி நபரே குண்டை எடுத்து வந்தவர் எனத் தாம் சந்தேகிப்பதாகவும் —

பொலீஸ் தரப்பில் தெரி விக்கப்படுகிறது. [ஐ-7-21]

## அடுத்து...

[முதலாம் பக்கத் தொடர்]

யுடன் இந்தப் பணிகள் விரை வில் நடைபெறவுள்ளன. இதற்கான ஏற்பாடுகளில் சிம்பாப்வேயின் மிதிவெடிய கற்றும் நிபுணர்கள் ஈடுபட் டுள்ளனர். (ஐ-5)

## புலிகளுடன்...

(முதலாம் பக்கத் தொடர்)

அவர்கள் யாவரும் என்னிடம் தெரிவித்தனர்.

97 ஆம் ஆண்டு ஜனாதிப திக்கும் எனக்கும் இடையில் லியம் பொக்ஸின் ஏற்பாட் டில் காணப்பட்ட உடன் பாட்டில் அரசும் புலிகளும் பேசவேண்டும் என்பதற்கு நான் இணக்கம் தெரிவித்தி ருந்தேன்.

விடுதலைப் புலிகளுடன் அரசு பேச்சுவார்த்தைநடத்து வதற்கு நாம் எதிர்ப்பில்லை.

புலிகளுடன் பேசுவது தொடர்பாக அரசாங்கம் இன்னமும் முடிவு எதனை யும் செய்யவில்லை. உடன் புலிகளுடன் அரசு பேசவேண் டும் என்றே நாம் கோருகின் றோம்.

அப்படிப் பேச்சு ஆரம்பிக் கப்படும் பட்சத்தில் அதற்கு நாம் முழு ஆதரவையும் வழங்குவோம்—

இப்படி ரணில் விக்கிரம சிங்க மேலும் தெரிவித்தார். (உ-3)


எமது பிரமிட் வீடியோ CD வெளியீடு!

விஜய் நடித்த

உ மின்சாரக் கண்ணா

**சுப்பஸோ வீடியோ**

149, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


# ரயில் நிலையம் அருகே வெடி பொருள்

மட்டக்களப்பு, செப். 28

பொலனறுவை மாவட்டம்- ஹிங்குராகொட ரயில் நிலை யத்திற்கு அருகில் அதி சக்தி வாய்ந்த வெடி பொருள் வைக்கப்பட்டிருந்த 'பிளாஸ் ரிக் கொள்கலன்ஒன்று மீட்கப் பட்டிருக்கிறது.

3 கிலோகிறாம் 'சி–4' ரக வெடிபொருள் கொண்ட பிளாஸ்ரிக் கொள்கலனே நேற்று முன்தினம் இரவு ரயில் நிலையத்திற்கு அருகிலுள்ள புதர் ஒன்றிலிருந்து பொலீஸா ரினால்மீட்கப்பட்டது.

மட்டக்களப்பிலிருந்து கொழும்பிற்கு ரயில் மூலம் கொண்டுசெல்லும் நோக்கில் அது அங்கு மறைத்துவைக்கப் பட்டிருந்திருக்கலாம் என பொலீஸார் சந்தேகிக்கின்ற னர். (ஐ-ரி-21)

## மட்டக்களப்பு - பொலனறுவை

# இராணுவ வாகன அணி நேற்றுச் செல்லவில்லை

மட்டக்களப்பு, செப். 28

மட்டக்களப்புக்கும் — பொலநறுவைக்கும் இடையில் நேற்று நடைபெற இருந்த இராணுவ வாகனத் தொடர் அணி சேவை இறுதி நேரத் தில் இடை நிறுத்தப்பட்ட தாக மட்டக்களப்புத் தகவல் கள் தெரிவித்தன.

நேற்றைய தினம் இராணுவ வாகனத் தொடர் அணி செல் வதற்கான ஏற்பாடுகள் யாவும் செய்யப்பட்டிருந்தன.

வழமைபோல் வாகனத் தொடர் அணிக்குப் பாது காப்பு அளிக்கும் வகையில் வீதிக் கண்காணிப்புப் பணி களில் இராணுவத்தினரும் பொலீஸாரும் நேற்றுக்காலை முதல் மாலை வரை ஈடுபட் டிருந்தனர்.

எனினும் இறுதி நேரத்தில் வாகன தொடர் அணிச் சேவை இடம் பெறவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ- .7-21)

## முல்லைத்தீவு...

[முதலாம் பக்கத் தொடர்]

எகிப்தில் உள்ள துறை முகம் ஒன்றில் இருந்து சென் னைக்கு உரவகைகளை ஏற் றிச் சென்ற—சீனாவில் பதிவு செய்யப்பட்ட — 'எம். வி. ஜூஜியா' (M. V. Yujia) என்ற சரக்குக் கப்பலே கடுமையான ஆர். பி. ஜி. தாக்குதலினா லும், பீரங்கித் தாக்குதலி னாலும் பலத்த சேதமடைந் தது.

14 ஆயிரம் மெற்றிக்தொன் உரவகைகளைஏற்றிச் சென்று கொண்டிருந்த இக்கப்பலில் 34 சீன மாலுமிகள் தங்கி இருந்தனர்.

அவர்கள் அனைவரும் கப் பலில் இருந்து பாதுகாப்பாக மீட்கப்பட்டிருப்பதாகவும்—

பலத்த சேதமடைந்த கப் பல் தற்சமயம் திருமலைக் கடற்பகுதியில் 'ரவுண்ட் ஐலண்ட்' என்ற சிறு தீவுக்கு அருகே இழுத்துவரப்பட்டு நிறுத்தப்பட்டிருப்பதாகவும்—

தெரிவிக்கப்படுகிறது.

கரையில் இருந்து சுமார் 50 கடல் மைல்கள் தொலை வில் சென்று கொண்டிருந்த சமயம் படகுஒன்றில் காணப் பட்ட ஆயுதபாணிகள் கப் பலை நோக்கி றொக்கெற்றுக் கள் மற்றும் துப்பாக்கிகளால் தாக்கியதாகவும்—

அவர்கள் விடுதலைப் புலி களாக இருக்கக்கூடும் எனத் தாம் சந்தேகிப்பதாகவும் —

கப்பல் மாலுமிகள் தெரி வித்துள்ளனர்.

சனிக்கிழமை இரவு முல் லைத்தீவுக் கடற்பகுதியில் ரோந்து நடவடிக்கையில் ஈடு பட்டிருந்த கடற்படைப்படகு கள் புலிகளின் படகு அணி ஒன்றை அவதானித்து அதன் மீது தாக்குதல் தொடுத்த தாகவும்—

அதனையடுத்து புலிகளின் மேலும் பல படகுகள் அப்பகு திக்கு வந்து சண்டையில் ஈடு பட்டதாகவும்—

பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

வடக்கு மற்றும் கிழக்குப் பிரிவு கடற்படைத் தளங் களில் இருந்து வந்த கடற் படைப் படகுகள் புலிகளின் படகுகளைத் தாக்கி விரட்டி யடித்ததுடன் புலிகளின் சில படகுகளை மூழ்கடித்ததாக வும் பாதுகாப்புத் தரப்பில் கூறப்படுகிறது.

சண்டை நடைபெற்ற சம யம் அப் பகுதியில் தென் பட்ட சரக்குக் கப்பலை அது வர்த்தகக் கப்பல் எனத் தெரிந்திருந்த போதும் புலி கள் அதன் மீது தாக்குதல் நடத்திச் சேதப்படுத்திய தாகக் கொழும்பில் பாது காப்பு வட்டாரங்கள் குற்றஞ் சாட்டின.

உடனடியாக விசேட கடற் படைப் படகுகள் வரவழைக் கப்பட்டு சரக்குக் கப்பலுக்கு பாதுகாப்பு வழங்கப்பட்ட தாகவும் பாதுகாப்பு வட்டா ரங்கள் தெரிவித்தன.

கடற் சண்டை மறுநாள் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 4மணி வரை நீடித்தது. இதில் கடற்படையினரின் இரு படகு கள் சேதமடைந்ததாகத் தெரி விக்கப்பட்டது.

இதேவேளை —

முல்லைத்தீவுக் கடற்பரப் பில் சீனக் கப்பல் மீது நடத் தப்பட்ட தாக்குதல் கடற் படையினராலேயே மேற் கொள்ளப்பட்டிருப்பதாக விடுதலைப் புலிகள் அறிவித் துள்ளனர்.

கடலில் சென்றுகொண்டி ருந்த இந்தக் கப்பலை விடுத லைப் புலிகளின் கப்பல் எனத் தவறுதலாகக் கருதி அதனைக் கடற்படையினர் தாக்கியிருக் கலாம் என்று 'புலிகளின் குரல்' வானொலி நேற்றிரவு தெரிவித்தது.

தாக்கப்பட்ட கப்பல் திரு மலைக்கு அருகே சிறிய தீவுப் பகுதியில் தரித்து நிற்பதாக வும் அந்த வானொலி தெரி வித்தது.

இதே வேளை —

கடலில் இடம்பெற்ற மோதல் தொடர்பாக விடு தலைப் புலிகள் தரப்பிலிருந் தும் எந்தத் தகவலும் வெளி யிடப்படவில்லை. (ரி-7-21)

## சீன...

(முதலாம் பக்கத் தொடர்)

சேதமடைந்த கப்பலைக் கரை சேர்த்து அதிலிருந்த உரவகைகளை தரையிறக்கு வது குறித்தும்—

இக் குழுவினர் நடவடிக்கை களை மேற்கொள்வர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை —

சேதமடைந்த கப்பல் கட லில் மூழ்கும் ஆபத்து ஏற்பட் டிருப்பதாக திருமலை தகவல் ஒன்று தெரிவித்தது. [ஐ-7]

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்[illegible] வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 28-09-1999 இல் அச்சிட்டு வெளியிடப்[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## செல்லையா தியாகராசா

(சுகாதாரத்திணைக்கள ஒய்வுபெற்ற இலிகிதர்)

செல்லையா தியாகராசா அவர்கள் 26-09-1999 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28-09-99) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 3-00 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக கோம்பையன்மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி தி. சாரதாமணிதேவி
(மனைவி)

43/5, யாழ்வீதி,
யாழ்ப்பாணம்.

(69425)

## திருமதி பரஞ்சோதி ஐயாத்துரை

(ஆசிரியை, சாவகச்சேரி றிபேர்க் கல்லூரி)

திருமதி பரஞ்சோதி ஐயாத்துரை அவர்கள் நேற்று 27-9-99 திங்கட்கிழமையன்று கர்த்தருக்குள் மகிமையடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வி. என். ஐயாத்துரை (இளைப்பாறிய உப அதிபர், சாவகச்சேரி றிபேர்க் கல்லூரி) அவர்களின் அன்பு மனைவியும் திரு. திருமதி டி.கே. சின்னத்தம்பியின் அன்புப் புதல்வியும் ஜோதிமலர், ஜோதிதாஸ், கிருபைமலர், கிருபைதாசன், ஞானதாசன், தங்கமலர் ஆகியோரின் அருமைத் தாயாரும் மகேந்திரன், ஜெபராணி, டாக்டர் டேவிட், மைதிலி ஆகியோரின் அருமை மாமியாரும் காலஞ்சென்ற சாந்தம்மா, நாகலிங்கம், எஸ். பி. சற்குணன், ஞானம்மா. ஐயாத்துரை, கிருபை கென்ஸ்மன் ஆகியோரின் அருமைச் சகோதரியும் சகுந்தலா, விமலேந்திரன், சுபேந்திரன், சர்வேந்திரன், அருண், அவந்தி ஆகியோரின் அன்புப் பாட்டியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை டிக்மன்ஸ் வீதி, இல 4, ஈபேர்ட் இடம், கொழும்பு-5 இல் உள்ள அன்னாரின் இல்லத்தில் நாளை (29-9-99) புதன்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு நடைபெற்றுப் பிற்பகல் 5. 30 மணிக்கு கனத்தை பொது மயானத்துக்கு பூதவுடல் எடுத்துச் செல்லப்பட்டு பின்னர் 6. 30 மணியளவில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஐ. ஞானதாசன்

இல 4, ஈபேர்ட் இடம்,
கொழும்பு-5.
தொலைபேசி இல: 590833

(சி/9119)

## திருமதி கற்பகப்பிள்ளை பொன்னம்பலம்

சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் இராச வீதி, கோப்பாய் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கற்பகப்பிள்ளை பொன்னம்பலம் 27 - 09 - 99 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்பலத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சோமசுந்தரம் (உரிமையாளர் Cartech, Jason Automobiles, Colombo), இராசம்மா, நாகேஸ்வரி, சம்பூரணம், தெய்வேந்திரா (பங்காளர் நஷனல் மோட்டோர்ஸ், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தாயாரும் செல்வராணி, அழகையா (இளைப்பாறிய விமானப்படை, லிகிதர்), காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை (இளைப்பாறிய பொலீஸ் உத்தியோகத்தர்), த்மநாதன் (உரிமையாளர் Electros, Ultra Communication திருநெல்வேலி), இராஜேஸ்வரி, நிர்மலபவானி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 28 - 09 - 99 இன்று 12.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் கோண்டாவில் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:-
பொ. தெய்வேந்திரா
பொ. அம்பலவாணர்
(நஷனல் மோட்டோஸ்)

இராச வீதி,
கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

(சி/9109)

## செல்லன் வேலும்மயிலும்

[ஆயுர்வேத வைத்தியர்]

பளைநகரைச் சேர்ந்த செல்லன் வேலும்மயிலும் காலமானார்.

அன்னார் சின்னப்பிள்ளையின் அன்புக் கணவரும் செல்வரத்தினம் (கிளிநொச்சி), சந்திரசேகரம் (கிளிநொச்சி), கைலாயமூர்த்தி (டோகா), ஸ்ரீஸ்வரலிங்கம் (சுவிஸ்), சிவஜெயம் (ஜேர்மனி), மாசிலாமணி (லண்டன்), சிவயோகம் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் செ. கவிதா, செ. மேனகா, செ. ரஞ்சினி, செ. ரேகா (கிளிநொச்சி), ச. சந்திரரூபன், ச. உதயரூபன், ச. சுமன் (கிளிநொச்சி), கை. பிரியா, கை. பிரசாந்த் (டோகா), சி. சியானா (சுவிஸ்), சி. யாழினி (ஜேர்மனி), மா. இன்பன், கரன் (லண்டன்), சிவகுமார் (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பாட்டனாருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வே. சந்திரசேகரம்
(மகன்)

பளை.

(சி/9111)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

இலங்கை

உடற்கல்வி
டிப்ளோமா
கற்கைநெறி
**கல்வி ஆண்டு**
**1999/2000**

1999/2000 ஆம் கல்வி ஆண்டுக்கான பதிவுகள் பின்வரும் திகதிகளில் நடைபெறும்.

புதிய மாணவர்களுக்கான பதிவு 1999-10-4 ஆம் திகதியும் இரண்டாம் வருட மாணவர்களுக்கான மீள்பதிவு 1999-10-5 ஆம் திகதியும் 9.00 — 12.00 மணி வரை யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட மாணவ ஆலோசகர் அலுவலகத்தில் இடம்பெறும். மாணவர்கள் ரூபா 5050/- இனை யாழ். பல்கலைக்கழக சிறாப்பர் கருமபீடம்/ பல்கலைக்கழக மக்கள் வங்கிக் கிளையில் செலுத்திய பற்றுச்சீட்டினை இணைத்து பதிவினை / மீள் பதிவினை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். மேற்படி திகதிகளில் பதிவினை மேற்கொள்ளத் தவறின் அபராதப் பணமாக நாளொன்றுக்கு ரூபா 25 வீதம் செலுத்த வேண்டும்.

புதிய மாணவர்களுக்கு அனுப்பிய கடிதங்களில் குறிப்பிடப்பட்டுள்ள பதிவுத் திகதி 23-10-1999 இல் இருந்து 04-10-1999 ஆம் திகதிக்கு முற்போடப்பட்டுள்ளது என்பதை கவனத்திற் கொள்ளவும்.

பதிவாளர்

(சி/9097)

## லிபேட்டி தியேட்டர்

அச்சுவேலி.
விஜய் – ரம்பா
நடித்த
**மின்சாரக்கண்ணா**
காட்சிகள்: 10-30, 2-30
T.P No. 070-212223

(69290)

## நாகம்ஸ்

சுன்னாகம்

சரத்குமார் – வினித்தா
சுகன்யா – கவுண்டமணி
நடித்த
**மகாபிரபு**
காட்சிகள்: 11-00, 2-30
(புதிய நேரம்)

(69365)

## ராஜா

யாழ்ப்பாணம்
இன்று மட்டும்
மம்முட்டி - தேவயானி
மற்றும் பலர் நடித்த
**மறுமலர்ச்சி**
நாளை முதல்
ரஜனி - குஷ்பு
நடித்த
**பாண்டியன்**
10-30, 2-30
(இ/9100)

# நிட்டம்புவவில் இளைஞன் சயனைட் அருந்தி மரணம்?

கொழும்பு, செப். 28

நிட்டம்புவ நகரில் கடந்த 24 ஆம் திகதி இரவு இறந்து கிடந்த தமிழ் இளைஞனின் சடலத்தில் சயனைட் இருந்ததா என்ற சந்தேகம் ஏற்பட்டிருப்பதாக பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

நிட்டம்புவவில் உள்ள நகைக்கடை ஒன்றின் முன்பாக சம்பவதினம் இரவு இனந் தெரியாத இளைஞர் ஒருவர் மயக்கநிலையில் கிடந்ததாகவும்—

அந்த நேரம் அந்த வழியால் சென்ற அத்தனகல பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவர் அந்த இளைஞனை தனது வாகனத்தில் ஏற்றிவந்து வத்துபிடிவல வைத்திய சாலையில் அனுமதித்தார் என்றும்—

பின்னர் அந்த இளைஞன் அங்கு மரணமடைந்தார் என்றும்—

பொலீஸாரின் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

பிரஸ்தாப இளைஞனின் மரணம் தொடர்பாக திடீர் மரண விசாரணை அதிகாரி குணதிலக மரண விசாரணையினை மேற்கொண்டார்.

இந்த விசாரணையில் சாட்சியமளித்த வைத்தியர் பிரஸ்தாப இளைஞர் சயனைட் உட்கொண்டு இருக்கலாம் என சந்தேகம் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து பிரஸ்தாப இளைஞனின் மரணம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை மேற்கொள்ளுமாறு மரண விசாரணை அதிகாரி அத்தனகல்ல பொலீஸாருக்கு உத்தரவிட்டார்.

இதேவேளை—

இறந்த இளைஞன் லபுகலேவில் வசித்து வந்த பாக்கியம் இதயஜீவியன் (வயது-24) என்று அடையாளம் காணப்பட்டுள்ளார். (க-8)

## சமய சந்நிதியில்

தென்கோவைப்பதி கட்டப்பிராய் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய மண்டலாபிஷேகப் பூர்த்தி இன்று காலை நடைபெறும்.

பிற்பகல் 4 மணிக்கு திருவூஞ்சல் இடம்பெற்று அம்பாள் வீதியுலா வருவார். (ஐ-7)

## நாகர் கோயில்
## பூர்விக நாகதம்பிரான் ஆலய
## 10 ஆம் நாள் தீர்த்தோற்சவம்

மேற்படி ஆலய தீர்த்தோற்சவம் 29 - 09 - 99 புதன்கிழமை ஆரம்பமாகும். பகல் நிகழ்வுகள் முற்பகல் 10. 00 மணிக்கு ஆரம்பமாகி பிற்பகல் 6. 00 மணியளவில் நிறைவுற்று இரவு நிகழ்வுகள் யாவும் 8. 00 மணிக்கு ஆரம்பமாகி அதிகாலை (மறுநாள்) 5. 30 மணிக்கு எம்பிரான் சமுத்திரத்துக்குப் புறப்படுவார்.

குறிப்பு:

இதற்கான போக்குவரத்துச்சேவையை (பருத்தித்துறை) இ. போ. ச. மேற்கொள்ளும்.

10 ஆம் நாள் தீர்த்தோற்சவ
உபயகாரர்

நாகர்கோயில் வடக்கு,
நாகர் கோயில்.

(சி/9107)

# கண்ணீர் அஞ்சலி

## திருமதி நீலாம்பிகை நாகராஜா

(யா/புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்)

23 ஆண்டுகளாக எமது பாடசாலையில் ஆசிரியராகவும் தொடர்ந்து உப-அதிபராகவும் கடமையாற்றி இளைப்பாறிய

திருமதி நீலாம்பிகை நாகராஜா

அவர்கள் பிரான்ஸில் காலமாகிய செய்தி கேட்டு அதிர்ச்சியடைகின்றோம். அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர்,
பழைய மாணவர் சங்கத்தினர்.

யாழ். புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்
றக்கா வீதி, யாழ்ப்பாணம்.

(சி/9106)

# கண்ணீர் அஞ்சலி

## அமரர் செல்லையா தியாகராசா

(ஓய்வு பெற்ற சுகாதாரத்திணைக்கள லிகிதர்)

அமரர் செ. தியாகராசா அவர்கள் வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தான ஆதீன மகாசபையின் முன்னாள் செயலாளராகவும் தற்போதைய நிர்வாக உறுப்பினராகவும் இருந்து தேவஸ்தானத்திற்கும் மகா சபைக்கும் அளப்பரிய தொண்டாற்றியுள்ளார். இவரது பிரிவு எமது சபைக்குப் பேரிழப்பாகும்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பகவானைப் பிரார்த்தித்து அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஆதீன மகா சபை உறுப்பினர்கள்.

வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப்
பெருமாள் தேவஸ்தானம்.

(69424)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செச்சினியா மீதுதரைவழித் தாக்குதல் நடத்த ரஷ்யப்படைகள் தயாராகின்றன

மொஸ்கோ, செப். 28

செச்சினிய இஸ்லாமியக் குடியரசு மீது ரஷ்யா யுத்தப் பிரகடனம் செய்துள்ளது. தரை வழியான தாக்குதல்கள் அடுத்த சில தினங்களில் ஆரம்பமாகும் எனமொஸ்கோ அறிவித்துள்ளது.

ரஷ்யாவில் தொடர்ச்சியாக இடம்பெற்ற குண்டு வெடிப்புக்களுக்கு காரணமானவர்கள் செச்சினியாவில் ஒளிந்துள்ளனர் என்று தெரிவித்து கடந்த சில தினங்களாக செச்சினியா மீது ரஷ்யா விமானத் தாக்குதல்களை நடத்தி வந்தது.

செச்சினிய எல்லைப் பகுதிகளைத் தளமாகக்கொண்டு இயங்கும் இஸ்லாமியத் தீவிரவாதிகள் மீது தாக்குதல் நடத்தும் நோக்குடனேயே இந்த யுத்தப் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.

தரைவழித் தாக்குதல்களை ஆரம்பிப்பதற்காக செச்சினிய எல்லைப் பகுதிகளில் நிலை கொண்டுள்ள ரஷ்யப் படைகள் பலப்படுத்தப்பட்டு வருகின்றன.

எல்லைப் பகுதிகளை நோக்கி ஆயிரக்கணக்கான ரஷ்யத் துருப்பினர் நகர்த்தப்பட்டு வருகின்றனர். 200க்கும் மேற்பட்ட கவசவாகனங்களும், டாங்கிகளும் எல்லையை நோக்கி சென்று கொண்டிருக்கின்றன.

நீண்ட தூர ஆட்லறிகள் உட்படஇராணுவ தளபாடங்களும் பெருமளவில் அனுப்பப்பட்டு வருகின்றன.

அண்மையில் இடம்பெற்ற குண்டு வெடிப்புக்களுக்கு செச்சினியா மற்றும் கஜகஸ்தான் எல்லைப் புறங்களைத் தளமாகக் கொண்டு இயங்கும் தீவிரவாதிகளே காரணம் என ரஷ்ய மக்கள் கருதுவதனால் செச்சினியா மீதான படையெடுப்புக்கு ரஷ்ய மக்களின் ஆதரவு இருப்பதாக அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

1996 ஆம் ஆண்டு செச்சினியா மீது ரஷ்யா மேற்கொண்ட இவ்வாறான படையெடுப்பு தோல்வியில் முடிவடைந்தது குறிப்பிடத்தக்கது. இந்த நிலையில் ரஷ்யா மீண்டும் செச்சினியா மீது போர்ப்பிரகடனம் செய்திருப்பது ஆபத்தான ஒரு நடவடிக்கை என்று அவதானிகள் கூறுகின்றனர்.

இதேவேளை— செச்சினியா கஜகஸ்தான் எல்லையில் உள்ள தீவிரவாதிகள் மீதான தாக்குதல்களை தீவிரப்படுத்தும் நோக்கில் ரஷ்ய உளவுப் படையே முக்கிய நகரங்களில் குண்டுகளை வெடிக்க வைத்திருக்கலாம் எனவும் சந்தேகம் எழுப்பப்பட்டுள்ளது.

[இ-6]

# இதுவரை தேர்தல் நடந்த 418 தொகுதிகளில் 235 பி. ஜே. பிக்கு!

## கருத்துக் கணிப்பு தெரிவிப்பு

புதுடில்லி, செப். 28

இந்திய நாடாளுமன்றத் தேர்தல்களில் இது வரை நான்கு கட்டங்களாக வாக்குப்பதிவு இடம் பெற்ற 418 தொகுதிகளில் 235 தொகுதிகளில் பாரதீய ஜனதாக்கட்சி தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி வெற்றிபெறும் என்று தூரதர்சன் தொலைக்காட்சி நடத்திய கருத்துக்கணிப்புத் தெரிவிக்கின்றது.

காங்கிரஸ் கட்சியும் அதன் தோழமைக் கட்சிகளும் 145 இடங்களையும் ஏனைய கட்சிகள் 38 இடங்களையும் கைப்பற்றும் எனவும் கருத்துக் கணிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கருத்துக் கணிப்பின்படி நாடாளுமன்றில் பெரும்பான்மை பெறுவதற்குப் பாரதீய ஜனதாக்கட்சி தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கு இன்னும் 37 இடங்கள் தேவை.

இன்னும் 125 தொகுதிகளுக்குத் தேர்தல்கள் நடத்தப்பட உள்ள நிலையில் பாரதீய ஜனதாக் கட்சி தலைமையிலான கூட்டணி பெரும்பான்மை பெறும் எனக் கருத்துக் கணிப்புத் தெரிவிக்கின்றது.

வாக்களிப்பு இடம்பெற்ற 124 தொகுதிகளை உள்ளடக்கிய 28 ஆயிரம் வாக்காளர்களிடம் இந்தக் கருத்துக் கணிப்பு நடத்தப்பட்டது.

இதேவேளை — இந்திய ஜெயின் தொலைக்காட்சி நடத்திய கருத்துக் கணிப்புப்படி பாரதீய ஜனதாக் கூட்டணிக்கு 230 இடங்களும் காங்கிரஸ் கூட்டணிக்கு 127 இடங்களும் கிடைக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் வேறோர் கருத்துக் கணிப்பில் காங்கிரஸ் கட்சி 201 இடங்களை வென்று தனிப்பெரும் கட்சியாக வரும் என்றும் —

பாரதீய ஜனதாக் கூட்டணிக்கு 200 இடங்கள் கிடைக்கும் என்றும் — கூறப்பட்டுள்ளது. (இ-6)

# பூட்டோவின் சொத்து ஏலத்தில்!

இஸ்லாமாபாத், செப், 28

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் பெனாசிர் பூட்டோவின் சொத்துக்களை பாகிஸ்தான் அரசு ஏலத்தில் விற்க உள்ளது.

பூட்டோ தனது ஆட்சிக் காலத்தின் போது சட்டத்துக்கு முரணான வகையில் சொத்துச் சேர்ந்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் அவரது சொத்துக்கள் பாகிஸ்தான் அரசினால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

பறிமுதல் செய்யப்பட்ட 200 கோடி ரூபா பெறுமதியான சொத்துக்கள் ஏலமிடப்படவுள்ளன.

(இ-க)

# மன நிலையை அறிய உதவும் கடிகார நிற மாற்றம்!

வாஷிங்ரன், செப். 28

மனிதர்களின் மன நிலையை வெளிப்படுத்தும் கைக் கடிகாரங்கள் தற்பொழுது அமெரிக்காவில் விற்பனைக்கு வந்துள்ளன.

இந்தக் கைக் கடிகாரத்தைக் கட்டியிருப்பவரின் மன நிலையை கடிகாரத்தின் நிறமாற்றம் மூலம்அறிந்து கொள்ள முடியும்.

ஒருவரது மன அழுத்தம் அதிகரித்தால் இந்தக் கடிகாரம் உடனடியாக கறுப்பு நிறமாக மாறும்.

குறைந்த தாக்கம் இருந்தால் கடிகாரம் சிவப்பு நிறத்தைக் காட்டும்.

கடிகாரம் நீல நிறமாக இருந்தால் அவரது மன நிலையில் எந்த வித மாற்றமும் இல்லை என்பதே அர்த்தம் ஆகும்.

இந்தக் கடிகாரம் ஜப்பானியக்கண்டுபிடிப்பு ஆகும். எனினும் அதனை உற்பத்தி செய்து விற்கும் உரிமையை அமெரிக்க கடிகார தயாரிப்பு நிறுவனம் ஒன்றுக்கு வழங்கப்பட்டுள்ளது.

தற்போது அமெரிக்கச் சந்தைகளில் இந்தப் புதிய கடிகாரம் விற்பனைக்கு விடப்பட்டுள்ளது

கைக் கடிகாரங்கள் நேரத்தை மட்டுமே காட்டும் என்ற நிலை மாறி அவை மனிதனின் மன நிலையையும் வெளிப்படுத்தும் என்ற நிலை தற்போது தோன்றியுள்ளது. [இ-6]

# கொசோவோ தனிநாடாக மாறும்

வாஷிங்ரன் செப். 28

யூகோஸ்லாவியாவின் ஒரு பகுதியாகவே கொசோவோ இருக்கும் என அமெரிக்கா வெளிப்படையாகக் கூறிவந்தாலும் தன்னாட்சி உரிமையுள்ள சுதந்திர நாடாக கொசோவோ உருவாகுவதை

உலக அரங்கில்

அமெரிக்காவால் தடுக்க முடியாது.

அமெரிக்காவில் இருந்து வெளியாகும் 'வாஷிங்ரன் போஸ்ட்'சஞ்சிகை இவ்வாறு செய்தி வெளியிட்டுள்ளது,

அமெரிக்க அரசாங்கத்துக்கு வழங்கப்பட்ட ரகசிய அறிக்கை ஒன்றை ஆதாரம் காட்டி'வாஷிங்ரன்போஸ்ட்' இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

(6)

## ஈராக்கின்

# ஏவுகணைத் தளம் மீது அமெரிக்கா தாக்குதல்

அபுதாபி, செப். 28

தெற்கு ஈராக்கில் அமைந்துள்ள ஏவுகணைத் தளம் ஒன்றின் மீது அமெரிக்க விமானங்கள் நேற்று முன்தினம் தாக்குதல் நடத்தின.

வளைகுடா கடற்பரப்பில் போக்குவரத்துச் செய்யும் கப்பல்களை இலக்கு வைத்துத்தாக்கும்வகையில் அமைந்திருந்த ஏவுகணைத் தளம் மீதே தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

வளைகுடா கடற்பரப்பில் பயணம் செய்யும் கப்பல்களுக்கு ஆபத்தை ஏற்படுத்தக் கூடிய இடத்தில் இந்தத் தளம்அமைந்திருந்ததாலும்—

ஈராக் அண்மையில் கப்பல் எதிர்ப்பு ஏவுகணைகளை இந்தத் தளத்துக்கு கொண்டு சென்று குவித்ததைத் தொடர்ந்துமே— இந்தத் தளம் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாக சவூதி அரேபியாவில் நிலை கொண்டுள்ள அமெரிக்கப்படைகளின் தளபதி தெரிவித்தார். (இ -6)

# கௌரவத்தைக் காக்க நடைபெறும் கொலைகள்

## மன்னிப்புச்சபை கண்டனம்

இஸ்லாமாபாத், செப். 28

தமது குடும்பத்துக்கு அகௌரவம் ஏற்படுத்தினார்கள் என்று குற்றஞ்சாட்டப்பட்ட இளம் பெண்கள் குடும்ப அங்கத்தவர்களாலேயே கொல்லப்பட்ட சம்பவங்கள் பாகிஸ்தானில் இடம்பெற்றுள்ளதாகச் சர்வதேச மன்னிப்புச்சபை தனது வருடாந்த அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.

காதல் கொள்ளுதல், கணவர்களை விவாகரத்துச் செய்தல், பாலியல் வல்லுறவுக்கு உட்படுதல் போன்ற காரணங்களால் குடும்பங்களுக்குஏற்படும் அகௌரவத்தைப் போக்கவே இவ்வாறு பெண்கள் கொலைசெய்யப்படுகின்றனர் என்று மன்னிப்புச்சபை குற்றஞ்சாட்டி உள்ளது.

பாகிஸ்தானின் பஞ்சாப் மாநிலத்தில் மட்டும் 286 இளம் பெண்கள் அவர்களது உறவினர்களால் கொல்லப்பட்டனர் என்றும்—

இந்தக் கொடூர சம்பவங்களுக்கு எதிராகப் பாகிஸ்தான் அரசு எந்தவிதமான நடவடிக்கையையும் எடுக்கவில்லை என்றும்—அறிக்கையில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இப்படியான பெண்கள் கோடரியால் வெட்டப்பட்டோ அல்லது தீவைக்கப்பட்டோ கொலை செய்யப்படுகின்றனர் என்று கூறப்படுகின்றது. (இ-க-8)

# இந்திய - பங்களாதேஷ் எல்லையில் மோதல்கள்

இந்திய — பங்களாதேஷ் எல்லைப் பகுதியில் இந்திய எல்லைப் பாதுகாப்பு படையினருக்கும் பங்களாதேஷ் துப்பாக்கிப் படையினருக்கும் இடையே மோதல்கள் அதிகரித்து வருவதற்கு பங்களாதேஷ் கண்டனம் தெரிவித்துள்ளது.

டாக்காவில் உள்ள இந்தியத் தூதர் தீப் முகர்ஜியை பங்களாதேஷ் வெளியுறவுச் செயலாளர் தமது அலுவலகத்துக்கு அழைத்து எதிர்ப்புத் தெரிவிக்கும் கடிதத்தை ஒப்படைத்தார்.

இந்திய பங்களாதேஷ் எல்லையில் அண்மையில் இந்திய இராணுவம் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் இரு பங்களாதேஷ் எல்லைப் படையினர் கொல்லப்பட்டனர்.

இதனை அடுத்தே பங்களாதேஷ் தனது எதிர்ப்பைத் தெரிவித்துள்ளது. [இ-க]

# தாய்வானில் மீண்டும் நிலநடுக்கம்

தாய்ப்பெய், செப் 28

தாய்வானில் இரண்டாவது தடவையாக கடந்த ஞாயிறன்றுபாரியநிலநடுக்கம் ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ரிச்டர் அளவு கோலில் 6.8 புள்ளியாக பதிவான இந்த நிலநடுக்கத்தினால் 4 பேர் உயிரிழந்துள்ளனர்.

15 மாடிக் கட்டடம் ஒன்று நிலநடுக்கத்தால் இடிந்து கீழ் இறங்கியுள்ளது. பல பகுதிகளிலும் நிலச்சரிவுகள் ஏற்பட்டுள்ளன.

கடந்த 20 ஆம் திகதி இடம்பெற்ற முதலாவது நில நடுக்கம் காரணமாக ஏற்பட்ட பாரிய சேதங்களை அடுத்து நாட்டில் அவசரகால நிலையை அரசு பிரகடனம் செய்த 24 மணி நேரத்துக்குள் இரண்டாவது பாரிய நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

இதேவேளை —

இரண்டாயிரத்துக்கும் அதிகமான உயிர்களைப்பலிகொண்டு பேரழிவை ஏற்படுத்திய நிலநடுக்கத்தை தொடர்ந்து மீட்புப் பணிகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வரும் வேளை 130 மணித்தியாலங்களின் பின்னர் இரு சகோதரர்கள் உயிருடன் மீட்கப்பட்டுள்ளனர்.

தலைநகர் தாய்ப்பெயில் ஒரு கட்டட இடிபாட்டுக்குள் இருந்து இவர்கள் மீட்கப்பட்டுள்ளனர்.

இருவரும் சீட்டு விளையாடிக் கொண்டிருந்த போது பூகம்பம் ஏற்பட்டதாகவும்—

இடிபாடுகளுக்குள் இருந்த குளிர்சாதனப் பெட்டியில் இருந்த அழுகிய அப்பிள் பழங்களையும் நீரையும் அருந்தியே தாம் உயிர் பிழைத்ததாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

அந்த இடிபாடுகளுக்குள் இன்னும் 4 பேர் அகப்பட்டிருக்கலாம் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (இ-6-9)


# தேடுகின்றோம்

நல்லூர் குறுக்கு வீதியைச் சேர்ந்த

## இராசரெத்தினம் தருமராசா

(தருமா வயது 45)

என அழைக்கப்படுபவர் கடந்த 22-09-99 அன்று காலை எமது வீட்டில் இருந்து வெளியேறி விட்டார் வெளியேறும் போது நீலநிறக் கட்டைக்காற்சட்டை மட்டும் அணிந்திருந்தார் சுமார் 5 அடி 3 அங்குல உயரமுடைய இவர் சிறிது சித்த சுவாதீன முற்றவராவார். இன்று வரை வீடு திரும்பாததினால் இவரைப் பற்றிய தகவல் தெரிந்தவர்கள் கீழ்க்காணும் முகவரியுடன் உடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

தகவல்
வி. வசந்தா
(சகோதரி)

37, நல்லூர் குறுக்கு வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(69422)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### யாழ்ப்பாணம்

மரணபயம் நாடகம் கேட்டீர்களா? அதை எழுதிய அராலியூர் ந. சுந்தரம்பிள்ளையின் நூல்கள் 1 யாழ்ப்பாணம் சிறுகதைத் தொகுதி 2 யாழ்ப்பாணமா? கொழும்பா? நாடகநூல், 3 யாழ்ப்பாணத்தில் அந்த ஆறு மாதங்கள், 4. நாடகம் எழுதுவது எப்படி? [69410]

### கலர் மீன்

கலர் மீன்கள், மீன் தொட்டிகளுக்குரிய அழகு பொருள்கள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:— A. அருளானந்தம் (குட்டி), 17, இராஜேஸ்வரி வீதி, நாயன்மார்கட்டு, யாழ்ப்பாணம். (12 மணிக்குப்பின் தொடர்பு கொள்ளவும்.) (69350)

### விற்பனைக்கு

6 இஞ்சி 1 அடி கல்லும், 18 இஞ்சி 1 அடி கல்லும் [பூச்சு தட்டிய பழைய கல்] உடன் விற்பனைக்கு உண்டு தொடர்பு: சின்னவி கந்தசாமி, நாச்சிமார் கோயிலடி, நவாலி வடக்கு, மானிப்பாய். [69389]

சிமெந்துத்தூண்கள், வேப்பம் பலகைகள், தீராந்திகள், கட்டில்கள். மெத்தை, மிக்ஸி, காஸ் சிலிண்டர், குக்கர், பிரிட்ஜ் விற்பனைக்குண்டு. தொடர்பு; ச. சபாபதி, நுணாவில் மத்தி, சாவகச்சேரி. (69407)

Yamaha DD 9 pad, Yamaha DD 50 pad, Audio miner 9 Channel with Echo Audio Sony Deck, 100w Stereo Amp கொங்கோறம்ஸ், 16 Channel Bass miner என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- 958/47 K K.S. வீதி, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம். (69358)

### வீடு வாடகைக்கு

கொழும்புத்துறை இல. 90, புங்கன்குளம் வீதியில் வீடு உடன் வாடகைக்கு கொடுக்கப்படும். தொடர்பு: டாக்டர் பாலசிங்கம், 90, புங்கன்குளம் வீதி, கொழும்புத்துறை. [69325]

### வெளிவந்துள்ளது

பண்டிதர் கி. சதாசிவசர்மாவினால் தொகுக்கப்பட்ட கிரந்த எழுத்தில் வெளியிடப்பட்ட நவராத்திரி காலத்துக்குகந்தமகிஷாசுரமர்த்தினி ஸ்தோத்திரம் அழகிய கணனிப்பதிப்பில் வெளிவந்துள்ளது. கி. சதாசிவசர்மா, கீதாலயம், மட்டுவில், சாவகச்சேரி. (69394)

### தவறிவிட்டது

இல. 40, சங்கிலியன் வீதி, நல்லூரைச் சேர்ந்த திருமதி தவமலர் ஆகிய எனது தேசிய அடையாள அட்டை (625563623V), விசேட அடையாள அட்டை என்பன (23.09.99) அன்று முத்திரைச்சந்திக்கும், புத்தூருக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து நல்லை ஆதீனத்தில் ஒப்படைக்கவும். (69397)

## தொழில்நுட்ப இறுதிப்பரீட்சை

யாழ். தொழில்நுட்ப நிறுவனத்தின் தேசிய ஆங்கில டிப்ளோமா இரண்டாம் வருட இறுதிப் பரீட்சைகள் அடுத்த மாதம் 12 ஆம் திகதி முதல் 14 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளன என்று பரீட்சை ஆணையாளர் அறிவித்துள்ளார்.

ஏனைய கற்கைநெறிகளுக்கான இறுதிப் பரீட்சைகள் இந்தப் பரீட்சையைத் தொடர்ந்து நடைபெறும் என மேற்படி நிறுவன பயிற்சி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

## வாழ்த்துகின்றோம்

சாவகச்சேரி தாமோதரம்பிள்ளை வீதியைப் பிறப்பிடமாகவும் ''திருவேரகம்'' சரசாலை வடக்கு சாவகச்சேரியை வதிவிடமாகவும், சாவகச்சேரி இந்துக்கல்லூரி தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவனும், முன்னாள் நில அளவையாளரும் தற்போதைய யாழ். மாவட்ட வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் ஒப்பந்தகாரருமாகிய (R. M. C.)

### திரு. ஆறுமுகம் ஜெயபாலன்

இம் மாதம் 23 ஆம் திகதி சமாதான நீதிவானாக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டதனை நாம் மனதார வாழ்த்துகின்றோம்.

— தாமோதரம்பிள்ளை வீதி நண்பர்கள்

சாவகச்சேரி [69411]

## வெற்றிக்கான திறன்கள் (Skills For Success)

## இளைஞர் யுவதிகளுக்கான கருத்தரங்கு

தனியார் துறையில் உயர்நிலை எய்தியவர்கள் தங்களுக்கு வழிகாட்டியாக அமைந்த திறன்களை உங்களுடன் பகிர்ந்து கொள்வர்.

இடம்: யாழ். வைத்தீஸ்வரா கல்லூரி

நாள்: 3-10-1999 ஞாயிற்றுக்கிழமை காலை 10மணி

தலைவர்: திரு. எம். நடராஜசுந்தரம்
வர்த்தக, முகாமைத்துவ கற்கைநெறி பீடாதிபதி யாழ். பல்கலைக்கழகம்

பேச்சாளர்கள்: கலாநிதி கே. குணராசா
பதிவாளர் — யாழ். பல்கலைக்கழகம்

திரு. கே. பூரணசந்திரன்
இயக்குநர் — புறமோட்டேஸ் எஞ்சினியேர்ஸ்

திரு. எஸ் ராமதாஸ்
இயக்குநர் — யூரோவில்

திரு. சி. வி. கே. சிவஞானம்
தலைவர் — யாழ். ப. நோ. கூ. சங்கம்

இக் கருத்தரங்குக்கு இளைஞர், யுவதிகள் அழைக்கப்பட்டுள்ளனர்,

யாழ்ப்பாணம் றோட்டறிக் கழகம்

(சி/9098)

## அரியாலை சனசமூக நிலையம்

யாழ். ரீதியில்

## பொன்விழாப் போட்டிகள்

இடம்: சனசமூக நிலையம் தற்காலிக மைதானம்
(கண்டி வீதி, மாம்பழம் சந்தி அருகில்)

ஈ.எஸ். பேரம்பலம் சக நிறுவனம் ஆதரவில்

**வலைப்பந்தாட்டம்**

29/ 9/ 30/09 & 2/10 ஆகிய திகதிகளில்—

வி. எஸ். பி. குறூப் ஆதரவில்

**கரபந்தாட்டம் - செற் அப்**

4, 5, 6, 7-10-99 ஆகிய திகதிகளில்—

எஸ். வி. எம். நிறுவன ஆதரவில்

**கரபந்தாட்டம் - ஓவர் கேம்**

3/10 & 8/10 ஆகிய திகதிகளில்— நடைபெறும்.

மெலோடியஸ் மியூசிக் ஆதரவில்

**5 மைல் வீதி ஓட்டம்**

9-10-99 காலை 7.00 மணிக்கு ஆரம்பமாகும்.

றியோ ஐஸ் கிறீம் ஆதரவில்

**வினோத ஆடைப் போட்டி**

10-10-99 மாலை 5.00 மணி.

(பொன்விழா அன்று)

— நிர்வாகம்

புங்கன்குளம்.
27—09—99

(சி/ 9096)

காணாமற்போனோர் குடும்பத்துக்கு

## சுயதொழில் வாய்ப்புக்கு குறைந்த வட்டியில் கடன்

### ஜனாதிபதியிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், செப். 28

''கடந்த காலங்களில் நிலவியவன்செயல்சம்பவங்களின் போது காணாமற்போனோரின் குடும்பஉறுப்பினர்கள் சுயதொழிலில் ஈடுபட குறைந்த வட்டிக்குக் கடன் வழங்க வேண்டும்'' என்று காணாமற்போனோரின் பெற்றோர்கள் அமைப்பு ஜனாதிபதியைக் கேட்டுள்ளது.

ஜனாதிபதிக்கு அந்த அமைப்பு அனுப்பியுள்ள கடிதம் ஒன்றிலேயே இப்படி கேட்கப்பட்டுள்ளது.

காணாமற்போனோரின் குடும்பங்களுக்கு வழங்கப்பட்டு வந்த நிவாரணங்கள் நிறுத்தப்பட்டுள்ளன என்றும்—

அந்த நிவாரணத்தை மீண்டும் வழங்க உத்தரவிட வேண்டும் என்றும் — அந்த அமைப்பு ஜனாதிபதியைக் கேட்டுள்ளது.

கடந்த காலங்களில் நிலவிய சம்பவங்களில் பொதுமக்கள் காணாமற்போனமைக்குத் தொடர்புடையவர்கள் மீது அரசாங்கம் நடவடிக்கை எடுக்காதது பாரிய பிரச்சினையாக உருவெடுத்துள்ளது என்றும் அந்த அமைப்பு ஜனாதிபதியிடம் சுட்டிக்காட்டியுள்ளது.

(இ-க)

## கலர் பிரிண்டிங் சேவை

கலர்ப் பட சுருள்களை 10 நாள்களில் Sirisara Colour Lab இல் கழுவிப் பெற்றுக் கொள்ளலாம்.

தரமான பிரிண்டிங்! குறைந்த கட்டணம்!
படப்பிடிப்பாளர்களுக்கு விசேட சலுகை!

அத்துடன் ❀ கலர் பிலிம்றோல் ❀ க/வெ பிலிம்றோல்
❀ க/வெ பிரிண்டிங் பேப்பர் (P.C, 12''×10'')
❀ பற்றரி வகைகள், ❀ பிளாஷ் பல்ப்
❀ பிறின்ரிங் கெமிக்கல் வகைகள்

மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

### யோகா போட்டோ & வீடியோ

78, காங்கேசன்துறை வீதி, சுன்னாகம்.

(69421)

உ

### யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி

கந்தரோடை - சுன்னாகம்



முத்த அதிபர்

**அமரர் வி. சிவசுப்பிரமணியம் J. P**
[B.A. B.Sc, , P. G. T.]

அவர்களின்

## மூன்றாவது ஞாபகார்த்த நினைவுப் பேருரை வைபவம்

தலைவர்:- திரு. க. சிவாஜி [அதிபர்]

காலம்:- 29 - 09 - 1999 புதன்கிழமை காலை 9.00 மணி

இடம்:- கந்தையா உபாத்தியார் நினைவு மண்டபம்

நினைவுப் பேருரை வழங்குபவர்

திருமிகு. சுந்தரம் டிவகலாலா அவர்கள்
(செயலாளர், வடக்கு — கிழக்கு மாகாணக் கல்வி, கலை பண்பாட்டு அமைச்சு)

விடயம்:- ''பாடசாலை முகாமைத்துவத்தில் அதிபர்களின் பங்கு''

நிறைவுரை:- திரு. ஆறு. திருமுருகன் (ஆசிரியர்)

மேற்படி வைபவத்தில் கலந்து சிறப்பிக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

கந்தரோடை,
சுன்னாகம்.

(சி/9099)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுமக்களை இலக்கு வைக்காதீர்
# 3 ஆயர்கள் ஜனாதிபதிக்கு கோரிக்கை

## புதுக்குடியிருப்புச் சம்பவம் குறித்துக் கடிதம்

கொழும்பு, செப் 28

'பொதுமக்கள் இலக்குகள் மீது மேற்கொள்ளப்படும் விமான மற்றும் ஷெல் தாக்குதல்களை உடன்நிறுத்த அரசு உத்தரவாதம் வழங்க வேண்டும்''

மேற்கண்டவாறு வடக்கு-கிழக்குமறைமாவட்டங்களின் மூன்று ஆயர்கள் கூட்டாக ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த 13ஆம் திகதி புதுக்குடியிருப்பில் மந்துவில் என்னும் இடத்தில் இடம் பெற்ற விமானத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக அவர்கள் ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள கடிதத்திலேயே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

விமானக் குண்டுத் தாக்குதல் இடம்பெற்ற பிரதேசத்தை நேரில் சென்று பார்வையிட்ட யாழ். ஆயர் அதிவண. தோமஸ் சௌந்தரநாயகம், மன்னார் ஆயர் அதிவண. இராயப்பு யோசெவ், மட்டக்களப்பு - திருமலை ஆயர் அதிவண. கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆகியோரே கூட்டாக இந்தக் கடிதத்தை அனுப்பியுள்ளனர்.

கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:—

புதுக்குடியிருப்பில் தாக்குதல் நடந்த இடத்தை நாம் நேரில் பார்த்தோம், அந்தப் பகுதியில் புலிகளின் முகாம்கள் எதையும் காணவில்லை. பொதுமக்களை இலக்கு வைத்தே இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது என்பதை எம்மால் உணர முடிகின்றது.

இராணுவ நடவடிக்கைகள் காரணமாக இடம்பெயர்ந்து, இடம்பெயர்ந்து இறுதியில் அங்கு தங்கியிருந்த மக்கள் மீதே தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதலில் 22 பொது மக்கள் உயிரிழந்துள்ளனர். 48 பொது மக்கள் காயமடைந்துள்ளனர். அவர்களை நேரடியாக நாம் பார்வையிட்டோம். கர்ப்பிணித் தாய்மார், குழந்தைகள் ஆகியோர் கூடக் காயமடைந்தவர்களில் இருந்தனர்.

வன்மையாக இந்தச் சம்பவத்தைக் கண்டிக்கும் நாம் கீழ்க்கண்ட கோரிக்கைகளை முன்வைக்க விரும்புகிறோம்.

★ பொதுமக்களை இலக்கு வைத்து விமான மற்றும் ஷெல் தாக்குதல் நடத்துவதை உடன் நிறுத்த ஆவன செய்ய வேண்டும்.

★ இந்தத் தாக்குதலுக்கான பொறுப்பை அரசு ஏற்க வேண்டும்.

★ சட்டத்துக்கு முரணான தாக்குதல் நடத்தியவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.

★ இந்தத் தாக்குதல் சம்பவத்தில் உயிரிழந்த மற்றும் காயமடைந்தவர்களின் குடும்பங்களுக்கு உரிய நஷ்ட ஈடு வழங்க வேண்டும். வன்செயல் சம்பவங்களில் பாதிக்கப்படுபவர்களுக்கு வழங்க நிர்ணயிக்கப்பட்டுள்ள சகல கொடுப்பனவுகளும் இவர்களுக்குக் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

★ இனிமேல் பொதுமக்கள் மீது தாக்குதல் நடத்தப்படமாட்டாது என்ற உத்தரவாதத்தையும் அரசு தர வேண்டும்.

இப்படி அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-3)

# யாழ். கல்வி வலயத்தில் 10 முதன்மை ஆசிரியர்கள்

யாழ்ப்பாணம் கல்வி வலயத்தில் 10 முதன்மை ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

புதிய சுற்றறிக்கையின் பிரகாரம் இவர்களுக்கான நியமனங்கள் இம் மாதம் 20 ஆம் திகதி தொடக்கம் வழங்கப்பட்டுள்ளதாக யாழ். கல்வித் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார். பின்வரும் எண்ணிக்கையில் நியமனம் வழங்கப்பட்டுள்ளது:-

தமிழ் மொழியும் இலக்கியமும் — 2 பேர், கணிதம் — ஒருவர், சமூகக்கல்வி — ஒருவர், வாழ்க்கைத் திருச்சிகள் — ஒருவர், சைவநெறி— 2 பேர். ஆரம்பக் கல்வி—2பேர், உடற்கல்வியும் உடல் நலக் கல்வியும் — ஒருவர்.

இவர்களுக்கான சம்பளம் அவர்கள் கற்பிக்கும் பாடசாலைகளில் வழங்கப்படும் என்றும் —

இவர்கள் அனைவரும் கோட்டக் கல்வி அலுவலகத்திலும் வலயக் கல்வி அலுவலகத்திலும் கடமையாற்ற வேண்டும் என்றும் —

தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-9-ரி)

### கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில்

# வகுப்பறைக் கொட்டகை புனரமைக்க நிதி உதவி

வலி.கிழக்கு, செப். 28

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் உள்ள தற்காலிக வகுப்பறைக் கொட்டகையினைப் புனரமைப்பதற்கென அகதிகள் புனர்வாழ்வுக் கழகம் 20 ஆயிரம் ரூபாவை வழங்கி உள்ளது.

நீண்ட காலமாக சேதமுற்ற நிலையில் இருக்கும் இந்த வகுப்பறைக் கொட்டகையைப் புனரமைக்க 50ஆயிரம் ரூபா செலவிடப்பட உள்ளது. எஞ்சிய தொகையைப் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் வழங்க உள்ளதாகக் கல்லூரி அதிபர் தெரிவித்தார்.

(ஐ-180)

# வீதி புனரமைப்பு

நாவற்குழி. செப். 28

சேதமடைந்துள்ள தனங்கிளப்பு வயற்கரை புங்கடு வீதி புனரமைப்புச் செய்யப்படும்.

இந்த வீதியைப் புனரமைப்புச் செய்வதற்கு சாவகச்சேரி பிரதேச சபை ஒரு லட்சம் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளது.

(தி-102)

# சங்கிலி மன்னன் காலத்திலிருந்தே குடாநாட்டில் கல்விப் பாரம்பரியம்

## மணிவிழா நிகழ்வில் துணைவேந்தர் உரை

நல்லூர், செப் 28

யாழ்ப்பாணத்தில் மிக மிக நீண்ட காலமாகவே கல்விப் பாரம்பரியம் நிலவி வருகிறது. அது குறுகிய கால எல்லைக்கு உட்பட்டதல்ல. நல்லூர் மன்னன் சங்கிலியன் காலத்திலிருந்தே இங்கு கல்விப் பாரம்பரியமும், அதற்கான தேடுதலும் இருந்துள்ளன என்று துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை தெரிவித்தார்.

கொக்குவில் இந்துக்கல்லூரி முன்னாள் அதிபர் சுடர் இ. மகேந்திரனின் மணிவிழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையில் துணைவேந்தர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ். மேலதிக அரச அதிபர் து. வைத்திலிங்கம் தலைமையில் அந்தக் கல்லூரியில் இடம்பெற்ற மேற்படி விழாவில் துணைவேந்தர் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:

யாழ்ப்பாணத்தில் உள்ள ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களின் ஒட்டுமொத்த பணியினால் எமது கல்விப் பாரம்பரியம் வளர்ச்சி அடைந்துள்ளது. தமிழகத்துக்கு நான் அண்மையில் விஜயம் மேற்கொண்டிருந்தபோது தமிழக அறிஞர்கள் பலர் நேரிடையாக இதனை என்னிடம் தெரிவித்துள்ளனர்.

இந்தியாவில் மாலிக்கபூரின் படையெடுப்பு இடம் பெற்ற காலப்பகுதியிலேயே அங்கிருந்து அறிஞர்கள், சோதிடர்கள் மற்றும் துறை சார்ந்த நிபுணர்கள் இங்கு வந்து எமது கல்வி வளர்ச்சிக்கு மேலும் மெருகூட்டினர்.

நான் 1954 இல் இந்துக்கல்லூரி மாணவனாக விளங்கிய காலத்தில் கண்ட மகேந்திரன் சிறந்த மாணவனாக, ஆசிரியராக, அதிபராக, நிர்வாகியாகமுன்னேறித் தனது வாழ்க்கையை நல்ல முறையில் அமைத்துக் கொண்டார்.

இப்போது கொண்டாடும் மணிவிழா இந்த சமூகம் கல்வியாளரை எவ்வாறு கௌரவிக்கிறது என்பதற்கு சிறந்த எடுத்துக் காட்டாகும் — என்றார்.

யாழ். மேலதிக அரச அதிபர் து. வைத்திலிங்கம் தமது உரையில்:—

கல்வியும் அனுபவமும் துணை நின்றால் சிறந்த சமூகத்தை உருவாக்கலாம். தன்னிடம் கல்வி கற்கும் மாணவர்கள் ஒழுக்கம் மிக்கவர்களாக விளங்க வேண்டுமென்பதில் கூடியளவு அக்கறை கொண்டவராக முன்னாள் அதிபர் மகேந்திரன் விளங்கினார் — என்றார்.

யாழ். உடற்கல்விப் பிரதிப் பணிப்பாளர் எஸ். அருணகிரிராஜா, யாழ். தென்னிந்திய திருச்சபைப் பேராயர் கலாநிதி எஸ். ஜெபநேசன் பிரம்மஸ்ரீ சிவசுப்பிரமணியக் குருக்கள், யாழ் இந்துக் கல்லூரி அதிபர் எஸ். சிறிக்குமாரன், கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் பொ. கமலநாதன், யாழ். இந்துக் கல்லூரியின் முன்னாள் பிரதி அதிபர் எஸ். சிவராமலிங்கம், கொக்குவில் இந்துக் கல்லூரி முன்னாள் அதிபர் அ பஞ்சலிங்கம் உட்பட பிரமுகர்கள் பலர் உரையாற்றினர். கல்வித்துறை சார்ந்தோர் பெருமளவில் இவ்வைபவத்தில் கலந்துகொண்டனர். (ரி-103)

## வாசகர் திருமுகம்

# மதிப்பீட்டுப் பணியில் யாழ். ஆசிரியர் புறக்கணிப்பு

அண்மையில் நடைபெற்ற கல்விப் பொதுத் தராதரப்பத்திர உயர்தரப் பரீட்சையின் விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் தற்போது கொழும்பில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. யாழ். மாவட்ட பாடசாலைகளில் உயர்தர வகுப்புக்களில் கற்பிக்கும் பெரும்பாலான ஆசிரியர்கள் மேற்படி மதிப்பீட்டுப் பணிகளுக்காக இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்துக்கு விண்ணப்பித்த போதிலும் மிகக் குறைந்த எண்ணிக்கையிலான ஆசிரியர்களே யாழ். மாவட்டத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்டிருக்கின்றனர். அதாவது ஒரு குறிப்பிட்ட பாடத்துக்கு நான்கு அல்லது ஐந்து ஆசிரியர்கள் என்ற விதத்திலேயே மேற்படி தெரிவு இடம்பெற்றிருக்கிறது.

கல்விப் பொதுத்தராதரப்பத்திர ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையானது பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களைத் தெரிவு செய்யும் பொதுப் போட்டிப் பரீட்சையாக நாடெங்கும் நடத்தப்படுவதால் கல்வியுலகில் கூடிய முக்கியத்துவம் பெறுகின்றது யாவரும் அறிந்ததே.

அத்துடன் இப்பரீட்சையில் மாணவர்கள் பெறும் ஒவ்வொரு புள்ளிகளும் மிகவும் பெறுமதியுடையவையாக இருந்து மாணவர்களின் எதிர்கால வாழ்க்கைத் தரத்தை நிர்ணயிக்கின்றன. உதாரணமாக பல்கலைக்கழகத்தில் விலங்கு மருத்துவம் கற்பதற்குத் தெரிவு செய்யப்படுகின்ற மாணவன் ஒருவன் இன்னும் மூன்று புள்ளிகள் மட்டுமே கூடுதலாகப் பெற்றிருந்தால் மருத்துவத்துறைக்கு தெரிவு செய்யப்பட்டிருப்பான்.

இங்கு விடயதானம் மட்டுமன்றி விடை எழுதும் முறையும் மாணவர்கள் பெறும் புள்ளிகளைத் தீர்மானிக்கின்றன. ஆகவே குறிப்பிட்ட ஒரு பாடவிடயத்தில் நன்கு தெளிவான விளக்கம் பெற்றிருக்கின்ற மாணவன் கூட விடை எழுதும் முறையில் ஏற்படும் கவனக்குறைவு காரணமாக அநாவசியமான முறையில் புள்ளிகளை இழக்கவேண்டிய நிலை ஏற்படுகின்றது என்பதை விடைத்தாள் மதிப்பீட்டுப் பணியில் ஈடுபட்டு அநுபவம் மிக்க ஆசிரிய உலகம் மட்டுமே நன்கறியும்.

அத்துடன் சில சமயங்களில் மொழிபெயர்ப்பு குறைபாடுகள் காரணமாக தமிழ்மொழி மூல வினாத்தாளில் ஏற்படும் தவறுகள், தெளிவின்மை போன்றவற்றைச் சுட்டிக்காட்டி தமிழ் மாணவ சமூகத்துக்கு நீதியைப்பெற்றுக் கொடுப்பதற்குப் பெரும்பாலான யாழ். ஆசிரியர்கள் மதிப்பீட்டுப் பணியில் பங்குபற்றுவது மிகவும் அவசியம் ஆகும்.

ஆகவே ஜி. சீ. ஈ. உயர்தர வகுப்புக்களில் நடைபெறும் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளில் இருந்து உச்ச பயனைப் பெறுவதற்கு ஆசிரியர்கள் விடைத்தாள் மதிப்பீட்டுப் பணியில் பெறும் அநுபவம் கூடிய முக்கியத்துவம் பெறுகின்றது என்பது யாரும் மறுக்க முடியாத உண்மை ஆகும்.

இந்நிலையில் எதிர்காலத்திலாவது பெரும்பாலான யாழ். ஆசிரியர்கள் மேற்படி பரீட்சையின் விடைத்தாள் மதிப்பீட்டுப் பணியில் கடமைபுரிவதற்குரிய வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பது மிகவும் அவசியம் ஆகும்.

— ஓர் ஆசிரியர்

கோப்பாய் வடக்கு.

# வி. எச். எவ். அலைவரிசையில் கல்வி ஒளிபரப்பு இடம்பெறுமா?

கல்வி ஒளிபரப்பு யாழ்ப்பாணத்தில் வசிக்கும் மாணவர்களது நலன் கருதிப் பலாலியிலிருந்து ஒளிபரப்ப நடவடிக்கை எடுக்கவேண்டுமென ரூபவாகினிக்குப் பல கடிதங்கள் எழுதியிருந்தேன். இப்பொழுது கல்வி ஒளிபரப்பை யாழ்ப்பாணத் தொலைக்காட்சி நிலையத்திலிருந்து ஒளிபரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இது மிகவும் விதந்து பாராட்டத்தக்க விடயமாகும்.

ஆனால் இந்த ஒளிபரப்பு யு. எச் எவ். அலைவரிசையில் மாத்திரம் ஒளிபரப்புச் செய்யப்படுவது வி. எச். எவ். அலைவரிசையை மாத்திரம் கொண்டுள்ள தொலைக்காட்சிப் பெட்டி வைத்திருப்பவர்களுக்குப் பயன்படாது.

போரினால் பாதிக்கப்பட்ட நிலையிலிருக்கும் பலரும் விலைமலிவான வி. எச். எவ். அலைவரிசையை மாத்திரம் கொண்ட தொலைக்காட்சிப் பெட்டிகளையே வைத்திருக்கின்றனர். எனவே வி. எச். எவ். அலைவரிசையில் ஜீ. சீ. ஈ. (சாதாரண உயர்தர) மாணவர்களுக்கான கல்வி நிகழ்ச்சிகளை ஒளிபரப்புவதற்குப் பலாலியிலுள்ள யாழ்ப்பாண ஒளிபரப்பு நிலையப் பொறுப்பாளர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். யாழ்ப்பாண மாணவர்கள் அனைவரும் பயன்பெற வழிவகுக்க வேண்டும்.

— ச. ஆ. கோபாலமூர்த்தி

திருநெல்வேலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வன்னியில் மருந்துத்தட்டுப்பாடு

# சுகாதார அமைச்சருடன் மன்னார் ஆயர் பேச்சு

கொழும்பு, செப். 28 வன்னியில் இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசத்தில் நிலவும் சுகாதாரச் சீர்கேடுகள் மற்றும் மருந்துத் தட்டுப்பாடு குறித்து மன்னார் ஆயர் அதிவண.ராயப்பு யோசெப் சுகாதார அமைச்சர் நிமால் ஸ்ரீபால டி சில்வாவுடன் பேச்சு நடத்தியுள்ளார்.

அண்மையில் வன்னியில் இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசத்துக்கு சென்றிருந்த மன்னார் ஆயர் அங்கு தாம் நேரில் கண்ட சுகாதாரப் பிரச்சினைகள் தொடர்பாக அமைச்சரை அவரது அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடினார்.

இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதியில் அமைந்துள்ள வைத்தியசாலைகளில் ஆய்வு கூட வசதிகள் இல்லை என்றும் —

மருந்துப் பொருள்களுக்கு அங்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது என்றும் —

நோயாளர்களை மேலதிக சிகிச்சைக்கு வவுனியாவுக்கு அழைத்துச் செல்ல போதிய அம்புலன்ஸ் வசதி இல்லை என்றும் — ஆயர் அமைச்சரிடம் பிரஸ்தாபித்தார்.

அம்புலன்ஸ் வசதி இல்லாத காரணத்தால் மேலதிக சிகிச்சைக்கு வவுனியா செல்ல வேண்டிய 20 நோயாளர்கள் புதுக்குடியிருப்பு வைத்திய சாலையில் உயிருக்காகப் போராடிக்கொண்டிருக்கின்றனர் என்றும் ஆயர் அமைச்சரிடம் சுட்டிக் காட்டினார்.

அந்தப் பிரதேசத்துக்கு அம்புலன்ஸை எடுத்துச் செல்ல பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்கினால் தமது அமைச்சு அம்புலன்ஸ் ஒன்றைத் தரத் தயாராகவிருப்பதாக அமைச்சர் ஆயரிடம் தெரிவித்தார்.

இராணுவக்கட்டுப்பாடற்ற பகுதியில் நிலவும் சுகாதாரப் பிரச்சினைகளைத்தீர்க்க தம்மால் முடிந்தளவு உதவுவதாக அமைச்சர் ஆயரிடம் உறுதி தெரிவித்தார்.

(இ-5-6-21)

ஈசன்
கல்வி நிலையம்
கே. கே. எஸ். வீதி,
கோண்டாவில்.
எழுதுவினைஞர்
போட்டிப்
பரீட்சைக்கான
வகுப்புகள்
ஆரம்பம்: 28 – 9 –99
செவ்வாய்
காலை 9.30 மணி
ஆசிரியர்: திரு. தவசேகர் (B.Sc )
(69405)

தேவை
G. C, E. O/L இல் தமிழில் C யும் ஆங்கிலத்தில் S உம் உடைய பெண்பிள்ளை எமது காரியாலயத்தில் எழுத்தாளராகப் பணிபுரியத் தேவை.
நேரில் தொடர்பு கொள்ளவும்.
துர்க்கா திருமண சேவை,
178, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
[69406]

31 ஆம் நாள் நினைவஞ்சலியும்
அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பும்

அன்னை மடியில்
15 — 05 — 1925



இறைவன் அடியில்
27 — 08 — 1999

திருமதி இராசரத்தினம் முத்தம்மா

திதி: 28 – 09 – 1999

எம்மை எல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு இறைவனின் அன்பான அரவணைப்பில் மீளாத்துயில் கொண்டு ஒரு திங்கள் ஆனாலும் ஆறவில்லை எம் காயம்.

தங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனின் பாத மலர்களைப் பணிந்து வேண்டுகின்றோம்.

இன்று (28 – 09 – 1999) செவ்வாய்க்கிழமை அன்னாரின் மகன் முத்துராசாவின் இல்லத்தில் நடைபெறும் கிரியைகளிலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்
சேச் லேன்,
தாவடி, கொக்குவில்.
(69396)

யாழ்ப்பாணப்
பல்கலைக் கழகம்
பொதுப்
பட்டமளிப்பு விழா
1999

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகப் பொதுப் பட்டமளிப்பு விழா எதிர்வரும் 1999—10—06 அம் திகதி மூன்று அமர்வுகளில் நடைபெறும்.

இந்தப் பட்டமளிப்பு விழாவில் நேரடியாகப் பட்டம் பெறுவோருக்கு 1999-09-30,1999-10-01, 1999-10-04 ஆகிய திகதிகளில் காலை 9.30-12.00 மணி வரையும் மாலை 1.30-3.30 மணி வரையும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்விக் கிளையில் பட்டமளிப்பு அங்கிகள் வழங்கப்படும்.

பட்டமளிப்பு விழாவில் புகைப்படம் எடுப்பதற்கான கட்டணமாக ரூபா 30 ஐ (போட்டோ ஒன்றுக்கு) பல்கலைக்கழக காசாளரிடம் செலுத்திய பற்றுச்சீட்டினைச் சமர்ப்பித்து பட்டமளிப்பு விழா அங்கிகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

பதிவாளர்
யாழ்ப்பாணப்
பல்கலைக் கழகம்.
27—09—99 (சி/9092)

# 1,200 பயனாளிகளுக்கு விவசாய உள்ளீடுகள்

யாழ்ப்பாணம், செப். 28 உலக உணவு விவசாய ஸ்தாபனத்தினால் யாழ். மாவட்டத்தில் மேலும் ஆயிரத்து 200 விவசாயப் பயனாளிகளுக்கு விவசாய உள்ளீடுகள் வழங்கப்படவுள்ளன.

இந்த ஆண்டில் உலக உணவு விவசாய ஸ்தாபனத்தினால் ஏற்கனவே இரண்டாயிரம் விவசாயப் பயனாளிகளுக்கு விவசாய உள்ளீடுகள் வழங்கப்பட்டன.

இடம்பெயர்ந்து புதிதாக மீளக்குடியமர்பவர்கள் மற்றும் புதிய இடங்களில் குடியமர்ந்தவர்களுக்கு உதவும் பொருட்டு மீண்டும் மேற்குறிப்பிட்ட தொகையினருக்கு இந்த உள்ளீடுகள் வழங்கப்படவுள்ளதாக உணவு விவசாய ஸ்தாபனத்தின்பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

புதிதாகத் தெரிவு செய்யப்படும் ஆயிரத்து 200 விவசாயப் பயனாளிகளுக்கும் மரக்கறி விதைகள், வாளி, கத்தி, மண்வெட்டி, தென்னங்கன்றுகள் போன்றவை வழங்கப்படவுள்ளன.

ஊர்காவற்றுறை,வேலணை, மருதங்கேணிப் பகுதிகளில் உள்ள விவசாயிகளுக்கு தகரப் பட்டைகள் வழங்கப்படவுள்ளன. (இ-5)

## முட்டை விலை அதிகரிப்பு

கோப்பாய். செப். 28 யாழ். குடாநாட்டில் முட்டையின் விலை அதிகரித்துள்ளது. 6 ரூபாவாக விற்பனையான முட்டை தற்போது 9 ரூபாவாக அதிகரித்துள்ளது.

முட்டையிடும் கோழிக் குஞ்சுகள் கொழும்பில் இருந்து கொண்டுவரப்படாதமையும் தரமான கோழித் தீவனங்கள் கிடைக்காமையுமே முட்டை விலை உயர்வுக்கு காரணம் எனக் கூறப்படுகிறது (இ-72)

கோழிப் பண்ணையாளர்களுக்கு
ஒரு நற்செய்தி

பிறிமா இன, ஒருமாதம் பூர்த்தியான 12 குஞ்சுகள் இவற்றின் செட்டைகளையும், கொண்டைப் பூவையும், சிறிது கொண்டையையும் அகற்றி விட்டேன். அதிக விளைவைத் தரும் இப்பரிசோதனையைத் தொடர ஆவலுள்ளவர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும்.

செ. பாலசுந்தரம்
802/5, பலாலி வீதி, திருநெல்வேலி.
(69404)

## வலிகாமம் தெற்கு பிரதேச சபை
## வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல்

கீழே குறிப்பிடப்படும் வேலைகளுக்கான கேள்விகள் 1999—10—06 ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். ஒவ்வொரு வேலைக்கும் அதற்கெதிரே காட்டப்படும் மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரக் கட்டணமும், மீளளிக்கக்கூடிய கேள்வி வைப்புப் பணமும் செலுத்துபவர்களுக்கு மட்டுமே எமது சபையின் பணிமனையில் 1999—10—05 ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிவரை கேள்விப் பத்திரங்கள் வழங்கப்படும்.

அ. எமது சபையில் வேலைகளுக்கான ஒப்பந்தகாரராக பதிவு செய்யப்பட்டவர்களுக்கு மட்டுமே கேள்விப் பத்திரம் வழங்கப்படவுள்ள வேலை விவரங்கள்.

| வேலையின் பெயர் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரக் கட்டணம் |
|---|---|
| 1. ஞானகலா சனசமூக நிலையம், குப்பிளான் தெற்கு கட்டடம் புனரமைப்பு | 250.00 |
| 2. ஸ்ரீ முருகன் சனசமூக நிலையம், மயிலங்காடு கட்டடம் புனரமைப்பு | 250.00 |
| 3 ஏழாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தில் குழாய்க் கிணறு அமைத்தல் | 125.00 |
| 4. தாவடி காளி கோயிலடியில் குழாய்க்கிணறு அமைத்தல் | 125.00 |
| 5. கந்தரோடை பிள்ளையார் கோயிலடியிலிருந்து மடத்தடி வரை விவசாய வீதி திருத்தம் | 350.00 |
| 6. புன்னாலைக்கட்டுவன் வடக்கு ஐயனார் விவசாய வீதி திருத்தம் | 350.00 |

ஆ. பின்வரும் வேலைகளுக்கான கேர்விப் பத்திரங்கள் எமது சபையில் பதிவு செய்யப்படாதவர்களுக்கும் வழங்கப்படும்,

| வேலையின் பெயர் | மீளளிக்கப்படும் கேள்விப் பத்திர வைப்புப்பணம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரக் கட்டணம் |
|---|---|---|
| 1. சனசமூக நிலையத்திற்கு தளபாடம் செய்து வழங்கல் | 500.00 | 125.00 |
| 2. மலகூடத்திற்கு பாதுகாப்புக் கேற் அமைத்தல் | 250.00 | 50.00 |

பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் பத்திரங்களின் மூலப்பிரதியை ''தலைவர், வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்'' என்னும் முகவரிக்கும், அதன் பிரதியை ''பிராந்திய உள்ளூராட்சி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம்'' என்னும் முகவரிக்கும், உரிய காலத்திற்கு முன்னர் பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் வேலையின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும். மேலதிக விவரம் தேவைப்படுவோர், அலுவலக நேரத்தில் சபையின் பணிமனையில் பெற்றுக் கொள்ளலாம்.

தி. மா. செல்வராசா ஜே. பி, யு. எம்.
தலைவர்,
வலிகாமம் தெற்கு, பிரதேச சபை.

வலிகாமம் தெற்கு, பிரதேச சபை,
சுன்னாகம்.
1999—09—24
(சி/ 9084)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## திருந்துமா?

பொலிஸாரின் எண்ணிக்கையை உடனடியாக அதிகரிக்க வேண்டும். நாட்டில் அதிகரித்து வரும் குற்றச் செயல்களைக் குறைக்க வேண்டுமாயின் பொலிஸ் சேவையில் புதியவர்கள் இணைக்கப்படுவது அவசியம்.

பொலிஸ் மா அதிபர் லக்கி கொடித்துவக்கு இவ்வாறு வலியுறுத்தி உள்ளார்.

நாட்டில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டும் பொறுப்புடையவர்கள் பொலிஸார். குற்றச் செயல்களைத் தடுப்பதும் அவற்றால் மக்கள் பாதிக்கப்படாமல் பாதுகாப்பதும் அவர்களின் கடமையே. குற்றம் செய்தவர்களைப் பாகுபாடு காட்டாமல் சட்டத்தின் முன் நிறுத்தித் தண்டனை வாங்கிக் கொடுப்பதும் பொலிஸாரின் பணியே.

அவர்களது பணி மக்கள் சேவைக்குரிய பல பிரிவுகளை உள்ளடக்கியதாகும். அதனால் வருடாந்தம் பொலிஸாரின் எண்ணிக்கை வருடாந்தம் அதிகரிக்கப்படுவது நடைமுறை.

ஆனால் வழமையான ஆளணி எண்ணிக்கைக்கு அதிகமானோரைச் சேர்க்க வேண்டியதற்கு பொலிஸ் மா அதிபர் கூறும் காரணமும் அதற்கான பின்னணியும் நோக்கப்பட வேண்டியவை.

நாட்டின் ஏழு மாகாணங்களிலும் குற்றச் செயல்கள் அபரிமிதமாக அதிகரித்து வருகின்றன. அங்கு பணிபுரியும் பொலிஸாரின் எண்ணிக்கை போதாமையே அதற்குப் பிரதான காரணம்.

இந்தக் காரணத்திற்குப் பின்னால் உள்ள ''நதிமூலம்'' மொத்தப் பொலிஸாரில் நாற்பது சதவீதமானோர் வடக்கு—கிழக்கு மாகாணத்தில் இராணுவத்தினருக்குப் பதிலாகப் பாதுகாப்புப் பணிகளில் ஈடுபடுத்தப் பட்டிருக்கிறார்கள் என்பதாகும்.

இலங்கை இராணுவத்தில் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் உள்ளனர். கடற்படை, விமானப் படையினர்களையும் சேர்த்து முப்படையினரின் எண்ணிக்கை இரண்டு லட்சத்தை எட்டும். இத்தனை பேரில் முக்கால்வாசிக்கு மேற்பட்டோர் வடக்கு—கிழக்கின் போர்க் களங்களில் பணி புரிகிறார்கள். ஒரு சாரார் இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் காவல் மற்றும் சோதனைக் கடமைகளிலும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

போர்க் களங்களில் இழக்கப்படும் படையினருக்குப் பதிலாகப் புதியவர்கள் சேர்க்கப்பட்டு வந்தார்கள். ஆனால் கவர்ச்சியான வருமானம், கவர்ச்சியான விளம்பரங்களின் மத்தியிலும் சிங்கள இளைஞர்கள் இப்போது இராணுவத்தில் சேர முன்வருவதில்லை; மிகவும் மந்தமான நிலை.

அதனால் இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் காவல் பணிகளில் 90 சத வீதமும் பொலிஸாரையே ஈடுபடுத்த வேண்டிய தேவை அரசுக்கு!

போரைத் தொடர்வது என்ற அரசாங்கத்தின் போக்கினால் வடக்கு — கிழக்கில் அழிவுகள், சேதங்கள் மற்றும் பல வகைப் பாதிப்புகள் உண்டாவது ஒரு புறமிருக்க —

தென்னிலங்கையில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்ட முடியவில்லை; குற்றச் செயல்களைத் தடுக்க இயலவில்லை. இதனால் அங்கு — தென்னிலங்கை மக்கள் மத்தியில் — அரசாங்கம் பலவீனமானது என்ற உணர்வு உண்டாகியுள்ளது.

போரைத் தொடர்வது என்ற அரசின் அழுங்குப் பிடியினால் எல்லாப் பக்கங்களாலும் அதற்கு நட்டமே. இதனை உணர்ந்தாவது அது தன்னைத் திருத்திக் கொள்ளக் கூடாதா?

# சமாதானத்துக்கு ஆதரவாகவும் எதிராகவும்
# கொழும்பில் தினமும் பெருகும் ஆர்ப்பாட்டங்கள்

**கொழும்பிலிருந்து ராகவன்**

ஒரு காலத்தில் அலங்கார ரதங்களாலும் கலாசார நிகழ்வுகளாலும் அலங்கரிக்கப்பட்ட இலங்கை தற்போது, ஆர்ப்பாட்டங்களாலும் பேரணிகளாலும் அங்கலாய்க்கின்றது தினமும்ஓர் ஆர்ப்பாட்டம்;எதிர்ப்பு ஊர்வலம்என்று பழக்கப்பட்டுவிட்ட நிலைக்கு நாடு தள்ளப்பட்டுள்ளது. குறிப்பாக தலைநகர்கொழும்பில் பஞ்சமே இல்லாத ஒரு நிகழச்சியாக இவை நடந்தேறுகின்றன. பணத்துக்கு ஆள் 'சப்ளை' செய்வோரை இவ்வாறான சில ஆர்ப்பாட்டங்கள் ஆனந்தப்படுத்தினாலும் மக்களைப் பெரிதாக இவை ஈர்ப்பதாகத் தெரியவில்லை. அரசியல் நோக்கத்துக்காக சுயநலன் கருதி ஏற்பாடு செய்ததனாலோ என்னவோ அவை மக்களை ஈர்க்கத் தவறுகின்றன. தற்போதைய சூழ்நிலையில் சமாதான கோஷங்களை எழுப்பவேண்டிய நிலையில் போருக்கு ஆதரவு தெரிவித்தும் நாட்டில் மற்றொரு இனக்கலவரத்தைத் தூண்டும் வகையிலும் சில அமைப்புக்கள் ஆர்ப்பாட்டங்களை அரங்கேற்றத் துடிக்கின்றன. குறிப்பாக வீரவிதான இயக்கம் இவ்வாறான ஆர்ப்பாட்டத்தில் அதிகளவில் ஈடுபடத் தொடங்கியுள்ளது.

கடந்த புதனன்று பயங்கரவாத எதிர்ப்பு இயக்கம் என்ற போர்வையில் வீரவிதான இயக்கம் சமாதான கோஷங்களைக் கண்டித்து ஆர்ப்பாட்டமொன்றை நடத்தி முடித்துள்ளது. கொலை செய்யப்பட்டோரின் படங்களை, பதாகைகளாகவும் சுவரொட்டிகளாகவும் நகரெங்கும் காட்சிப்படுத்தி பெருந்திரளான மக்களை ஆர்ப்பாட்டத்துக்கு கூட்ட இவ்வமைப்பு எண்ணியிருந்தாலும் பெண்கள், பிக்குகள் உட்பட சுமார் 300 பேர் வரையிலேயே கலந்துகொண்டிருந்தனர். வெகுஜன ஊடகங்களும் மிகப்பெரிய பிரசாரத்தைப்பெற்றுக்கொடுக்க திரண்டிருந்தன. ஆனால் படம்பிடித்துக் காட்டும் அளவுக்கு பெரிதாக ஆள்கள் சேரவில்லை.

இராணுவ ரீதியிலான தீர்வை முன்வைத்து இவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்த மக்களோ பேச்சுவார்த்தையே சிறந்தது என்பதனை உணர்ந்து இதில்கலந்துகொள்ளாமலிருந்திருக்கலாம் எனப் பேசப்பட்டது.

இதேவேளை இவ் வார்ப்பாட்டத்துக்கு முதல் நாள்— அதாவது கடந்த செவ்வாயன்று— நாட்டில் வெவ்வேறு இடங்களில் இரு சமாதான ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன. காலியில் அரசாங்கத் தரப்பால் அரசாங்க அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் பங்களிப்பில் நடைபெற்ற சமாதான ஊர்வலம் தேர்தல்களத்தைநோக்கிமுன்னெடுக்கப்பட்ட ஒரு செயலாகவே கருதப்படுகின்றது. அதே தினத்தில் கொழும்பில் பெண்கள் அமைப்பு உட்பட சில மனித உரிமை அமைப்புகள் சமாதான ஆர்ப்பாட்டமொன்றை நடத்தின. பெரிதாக வெகுஜன ஊடக பிரசாரமின்றி நடைபெற்ற இவ் வார்ப்பாட்டத்தில் யுத்தம் புரியும் இருதரப்பினரும் மாறி மாறிப் பொது மக்களை படுகொலை செய்வதாக குற்றஞ்சாட்டப்பட்டது. யுத்தத்தை நிறுத்துமாறு கோரியே இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. யாழ். பல்கலைக்கழக முன்னாள்விரிவுரையாளரான ராஜினி திரணகம படுகொலைசெய்யப்பட்டு பத்து ஆண்டு பூர்த்தியாவதையொட்டி இவ்வார்ப்பாட்டம் நடத்தப்படுவதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்திருந்தனர்.

சமாதானம் என்பதை அரச ஊடகங்கள்கூட கண்டுகொள்ளாத நிலையையே காட்டி நின்றது. கடந்த வாரம் இடம்பெற்ற கோணகல சம்பவத்தைப் படம் பிடிக்க அரச விமானங்களில் ஊடகவியலாளர்கள் அழைத்துச் செல்லப்பட்டார்கள். அங்கிருந்து வந்த படங்கள் தலைநகரின் சிங்கள ஆங்கில பத்திரிகைகளை நிரப்பியிருந்தன. பக்கம் பக்கமாக கட்டுரைகள், கண்டனங்களென்று எழுதப்பட்டிருந்தன. ஆனால்அதற்கு ஒத்ததாக இடம்பெற்ற புதுக்குடியிருப்பு சம்பவம் பற்றி அரசாங்க ஊடகங்களோ தனியார் ஊடகங்களோமௌனம் சாதித்தன.

எந்தப் பகுதியில் எவ்வினத்தைச் சேர்ந்தவர்கள் படுகொலை செய்யப்பட்டாலும் அதனைக் கண்டிப்பதே நியாயம். ஆனால், ஓரினம் அழிந்தால் கொண்டாட்டமும் வேறொரு இனம் அழிந்தால் கொதித்தெழும் ஆர்ப்பாட்டமும்என்றபோக்கை அரசாங்கமும் பொது அமைப்புகளும் மாற்றும் வரை நிரந்தர சமாதானம் ஏற்பட வாய்ப்பே இல்லை.

### பல்கலை அனுமதியில் மாவட்ட கோட்டாமுறைநீக்கம்

இது அவ்வாறிருக்க நாட்டின் புதிய கல்விச் சீர்திருத்தத்தின்படி புதிய நூற்றாண்டோடு பல்கலைக்கழக அனுமதியின் போது மாவட்ட கோட்டா முறையும் நீக்கப்படுவதுடன், தகுதிகாண் பொது அறிவுத் தேர்வும் கட்டாயப்படுத்தப்படுமென்றும் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. முன்னர் இரண்டு தடங்களைத் தாண்டி பல்கலைக் கழகம் செல்லும் நிலையில் இருந்த மாணவர்கள் தற்போது மேலுமொருதடத்தை தாண்ட வேண்டியவர்களாகி விட்டார்கள். பாடசாலை பாட விதானங்களில் எவ்வித மாற்றமும் செய்யாது பொது அறிவு என்று மாணவர்கள் மீது சுமத்தப்பட்டால் அவர்கள் அதிலிருந்து மீள்வது சற்றுக் கடினமே. பொது அறிவுகட்டாய தேவை ஆனாலும்அவர்கள்முறையாக வழி நடத்தப்பட்டு பின்னர் அவ்வாறானதொரு தேர்வு இடம்பெறுமாயின் அது வரவேற்கவேண்டியதே. இதனால் அதிக பாதக நிலையை பின்தங்கிய மவட்ட மாணவர்களே எதிர்கொள்வார்கள் என்பதும் திண்ணம். இத்துடன் பல்கலைக்கழக அனுமதியின்போது வழங்கப்பட்டிருந்த மாவட்ட ரீதியான கோட்டாமுறையும் நீக்கப்பட்டு ஆகக் குறைந்த வெட்டுப் புள்ளி 180 இலிருந்து 130 ஆகக் குறைக்கப்படுமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. மாவட்ட கோட்டா நீக்கமும் நிச்சயமாகப் பின் தங்கிய மாணவர்களையே அச்சுறுத்தும் என்பதும் உண்மையே.

இவ்வாறானதொரு சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தேசிய இளைஞர் முன்னணி பொது அறிவுத தேர்வுக்கு எதிர்ப்புத் தெரிவித்து மகஜரொன்றைத் தயாரித்துள்ளது இதுவரை காலமும் நாம் இரண்டு தகுதிகாண் பரீட்சைக்கு முகங் கொடுத்தோம் புதிய சீர் திருத்தத்தினூடாக அது நான்காக உயர்கின்றது என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ள இம் மகஜரில் ஒரு லட்சம் பேரின் கையொப்பத்தை யிட்டு ஜனாதிபதியிடம் கையளிக்கவும் ஏற்பாடாகியுள்ளது.

### சார்க் திரைப்பட விழா

இது இவ்வாறிருக்க கடந்த பல வாரங்களாகப் பல்வேறுபட்ட அழுத்தங்களுக்கு முகங் கொடுத்து வந்த மக்களுக்கு 'சார்க்' திரைப்பட விழா புதிய அனுபவத்தைப் பெற்றுத் தந்துள்ளது. சார்க் நாடுகளைச்சேர்ந்த பல்வேறு படங்கள் இங்கு காண்பிக்கப்பட்டன. ஒலியோவியத்தை வார்த்தைகளின் துணையின்றி ரசிக்கலாம் என்பதனை இத் திரைப்படங்கள் உணர்த்தத் தவறவில்லை. இத்திரைப்படங்கள் ஹிந்தி, வங்காளம், உருது போன்ற மொழிகளிலும் மெருகேறியிருந்தன. அந்தந்த நாடுகளின் சமூக பின்னணி சித்திரிக்கப்பட்டிருந்தது. பங்களாதேஷ் நாட்டின் படமொன்று அந்நாட்டில் வெள்ளத்தால் தனது மனைவியையும் குழந்தையையும் இழந்த ஒருவனின் பாத்திரத்தை அருமையாக வெளிக் கொணர்ந்திருந்தது. மற்றும் கே பாலச்சந்தரின் 'தண்ணீர் தண்ணீர்' போன்ற படங்களும் காண்பிக்கப்பட்டன நீண்ட காலத்துக்குப் பின்னர் நல்லதொரு அனுபவத்தைக் கண்டு களித்தோர் பெற்றிருப்பார்கள்.

'சார்க்' திரைப்பட விழாவை ஆரம்பித்து வைத்த ஜனாதிபதி தமது நியூயோர்க் பயணத்தை ஆரம்பித்துள்ளார். முன்னதாக வெளிநாட்டமைச்சர் கதிர்காமர் மற்றும் அவருடைய செயலாளர் அங்கு அனுப்பப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது நாட்டின் இன்றைய நிலை குறித்து அமெரிக்காவில் பல தரப்பினருடனும் பேசப்படும் என்றும் தெரியவந்துள்ளது— எவ்வாறாயினும் யாருடன் யார் பேசினாலும். தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு வரும் என்று நம்புவதற்கு எதுவுமில்லை.

★

# விவசாயப் பாடசாலைகளில் டிப்ளோமா பயிற்சி நெறி

இரண்டாயிரம் மற்றும் இரண்டாயிரத்து இரண்டாம் ஆண்டில் இலங்கை விவசாயப் பாடசாலைகளில் இரு வருடகால டிப்ளோமா பயிற்சி நெறியைக் கற்பதற்கான புலமைப் பரிசில்களை விவசாயத் திணைக்களம்வழங்கஉள்ளது.

இந்தப் பயிற்சி நெறிக்குத் திணைக்களங்கள், மாகாண சபைகள் மற்றும் ஏனைய அரச நிறுவனங்களில் பணிபுரியும் விவசாயத் துறை சார்ந்தவர்கள் விண்ணப்பிக்கலாம் என்றும் — விண்ணப்பங்களை எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பவேண்டும் என்றும்– விவசாயத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

[இ-கு]

## நாளை

புரட்டாதி 12

புதன்கிழமை

திதி: சதுர்த்தசி

முற்பகல் 9.31 வரை

நட்சத்திரம்: கார்த்திகை

பின் இரவு 3.27 வரை

கார்த்திகை விரதம்

சுபநேரம்: 4.32—6.02

ராகுகாலம்: 12.02—1.32

(பகலுக்கும் இரவுக்கும் பழையநேரப்படி)

## முதியோர் வார நிகழ்ச்சிகள்

சண்டிலிப்பாய், செப். 28

சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் முதியோர் வாரத்தை முன்னிட்டு அடுத்த மாத முதல் வாரத்தில் பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்துவது என்று தீர்மானித்துள்ளது.

(ஐ-135)

### உதயவாக்கு

புகழ் என்பது ஒருவன் தன்னோடுவைத்து வளர்க்கும் [illegible]

— சாக்ரடீஸ்

# வவுனியாவில்
# அசம்பாவித செயல்களில் ஈடுபட வேண்டாம்
## எல்லைக்கிராம மக்களுக்கு அறிவுறுத்து

வவுனியா, செப். 28

வவுனியாவில் எந்தவித அசம்பாவித நடவடிக்கைகளிலும் ஈடுபட வேண்டாம் என்று வவுனியா எல்லைக் கிராமத்தவர்களைப் படையினர் கோரியுள்ளனர்.

கடந்த 20ஆம் திகதி இரவு எல்லைக் கிராமத்தில் இருந்து ஆயுதங்களுடன் வாகனங்களில் வந்த சிலர் பூந்தோட்டம் அகதி முகாம் மீது தாக்குதல் நடத்த முனைந்தமையும் —

அந்த முகாமில் காவலுக்கு இருந்த பொலீஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததை அடுத்து அந்தக்குழு தப்பி ஓடியதும் — தெரிந்தவை.

வவுனியாவில் மூவின மக்களும் ஐக்கியமாக வாழ்ந்து வருகின்றனர் என்றும் —

இனங்களுக்கிடையில் குழப்பத்தை ஏற்படுத்தக்கூடிய வகையில் எவரும் செயற்படக்கூடாது என்றும் — படையினர் ஒலிபெருக்கி மூலம் அறிவிப்பு விடுத்து வருகின்றனர்.

எல்லைக்கிராமங்களான மடுகந்தை, குடாக்கச்சைக் கொடி ஆகிய கிராமங்களிலேயே இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டது.

(இ-3-6-21)

## கட்டாக்காலி நாய் அழிப்பு

யாழ்ப்பாணம், செப். 28

வலி. தெற்குப் பிரதேச சபையின் ஏற்பாட்டில் ஏழாலை, புன்னாலைக்கட்டுவன் ஆகிய பகுதிகளில் நாளை புதன்கிழமை கட்டாக்காலி நாய்களைப் பிடிக்கும் பணி இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விமானப்பயண பாதுகாப்பு அனுமதி வழங்கப்பட்டவர்களின் விவரம்

யாழ்ப்பாணம், செப். 28

யாழ். குடாநாட்டில் இருந்து வெளி இடங்களுக்கு விமானம்மூலம்பயணம்செய்ய பாதுகாப்பு அனுமதி வழங்கப்பட்டவர்களின் பெயர் விவரங்கள் உதயனில் தொடர்ந்து வெளியாகி வருவது தெரிந்ததே.

இம் மாதம் ஐந்தாம் திகதி வரைக்கும் அனுமதி வழங்கப்பட்டோரின் பதிவு இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாக வருமாறு:

(இம் மாதம் 15 ஆம் திகதி வரை விமானப் பயண அனுமதி பெற்றோரில் ஒரு பகுதியினரின் விவரங்கள் கடந்த 20 ஆம், 21 ஆம் திகதிகளில் பிரசுரிக்கப்பட்டன. மிகுதி பின்னர் வெளியிடப்படும்.)

**ஊர்காவற்றுறை**

[எஸ். எல். என் ஏ], [எஸ். எல். என். பி], [எஸ். எல். என். சி], [எல். என். டி. டி.], [எஸ். எல். என். 11334சி], [எஸ். எல். என். 11334டி], [எஸ். எல். என். 11334ஈ], [எஸ். எல். என். 11409ஏ], [எஸ். எல். என். 11409பி], [எஸ். எல். என். 11562ஏ], [எஸ். எல். என். 11562பி], [எஸ். எல். என். 11681ஏ], [எஸ். எல். என். 11684ஏ], [எஸ். எல். என். 11684பி], [எஸ். எல். என். 11700ஏ], [எஸ், எல். என். 11726ஏ], [எஸ். எல். என். 11726பி], [எஸ். எல். என். 11726சி], [எஸ். எல். என். 11726டி], [எஸ். எல். என். 11726ஈ], [எஸ். எல். என். 11743ஏ]. [எஸ். எல். என். 11743பி], [எஸ். உல். என். 11743சி], [எஸ். எல். என். 11761ஏ], எஸ். எல். என். (11853ஏ), (எஸ். எல். என். 11868 ஏ), (எஸ், எல். என். 11868 பி). (எஸ். எல். என். 11871 ஏ), (எஸ். எல். என். 11871 பி), [எஸ். எல். என். 11871 சி). (எஸ். எல். என். 11931 ஏ), (எஸ். எல். என். 11931பி), (எஸ். எல். என். 11931 சி), (எஸ். எல். என். 11931 டி), (எஸ். எல். என். ஸ்ரீலங்கா கடற்படை).

(எஸ். எல். என், 11780ஏ], (எஸ். எல். என். 11796 ஏ), (எஸ். எல். என். 11818 ஏ), (எஸ். எல். என். 11819 ஏ), (எஸ். எல். என். 11820 ஏ), (எஸ். எல். என். 11837 ஏ), (எஸ். எல். என். 11837 பி), (எஸ். எல். என். 11837 சீ), (எஸ். எல். என். 11839 ஏ), (எஸ். எல். என். 11840 ஏ), (எஸ். எல். என். 11840 பி), (எஸ். எல். என். 11847 ஏ), (எஸ். எல். என். 11851ஏ).

**சங்கானை**

[103470ஏ], [103470பி], [103470 சி], [108832 ஏ], [108833 ஏ], [108947 ஏ], [108958 ஏ], [111746 ஏ].

[111747ஏ], [111966ஏ], [111967 சி], [112049 ஏ], [112063 ஏ], [112100 ஏ], [112100 பி], [112100 சி], [112100 டி], [112125 ஏ].

[112204ஏ], [112204பி], [112760 ஏ], [112760 பி], [112760 சி], [112760 டி], [112780 ஏ], [112783 ஏ], [112783 பி], [112949 ஏ], [112950 ஏ].

[112962ஏ], [112981ஏ], [113038ஏ], [113038பி], [113080ஏ], [113080பி], [113086ஏ], [113107பி], [113111ஏ], [113111பி], [113151ஏ], [113151பி], [113151சி].

[114603ஏ], [114779ஏ], [114914ஏ], [114959ஏ], [115004ஏ], [115004பி], [115004சி], [115043ஏ], [115057ஏ], [117006ஏ), [117008ஏ], [117020ஏ], [117020பி], [117789ஏ], [812202ஏ].

**யாழ்ப்பாணம்**

(104204ஏ), (109862ஏ), (110251ஏ), (081910ஏ), (081910பி), (094368ஏ), (094368பி), (094368சி), (096125ஏ), (096125பி), (098471ஏ), (098471பி).

(098471சி), (098471டி), (098471ஈ), (098471எவ்), (098786ஏ), (102357ஏ), (102357பி), (102357சி), (102552சி), (104617ஏ), (104617பி), (104777ஏ). (104777பி).

(104777 சீ), (104777டி), (104777 ஈ), (107058 ஏ), (107058 பி), (107058 சி), (107301 ஏ), (109127ஏ), (109130 ஏ), (109165 ஏ), (109165 பி), (109165 சி), (109165 டி).

(109202 ஏ), (109202பி), (109202 சி), (109269 ஏ), (109273 ஏ), (109273 பி), (109397 ஏ), (109480 ஏ), (109532 ஏ), (109554 ஏ), (109554 பி), (111085 ஏ), [112164 ஏ], (112297ஏ], [112297 பி], [112310 ஏ], [112357 ஏ], [112357 பி], [112357 சீ], [112357 டி], [112408 ஏ], [112411 ஏ], [112415 ஏ], [112415 பி], [112415 சி].

(112415டி), (112415ஈ), (112430ஏ), (112430பி), (112430சி), (112468ஏ), (112468பி), (112480ஏ), (112480பி), (112482ஏ), (112494ஏ). (112494பி), (112495ஏ),

(112496ஏ), (112496பி) (112528பி), (112528சி), (112531ஏ), (112531பி), (112555ஏ), (112564ஏ), (112577ஏ), (112609ஏ), (112618ஏ), (112635ஏ), (112635பி), (112647ஏ),

[112647பி], [112647சி], [112675ஏ], [112675பி], [112684ஏ], [112701ஏ], [112701பி], [112701சி], [112701டி], [112701ஈ], [112724ஏ], [112733ஏ], [112734ஏ], [112734பி],

[112738ஏ], [112738பி], [112739ஏ]. [112743ஏ], [112748ஏ], [112748பி], [112748சி], [112755ஏ], [113787ஏ], [113787பி], [113787சி], [113802ஏ].

[113815ஏ], [113828ஏ], [113832ஏ], [113832பி], [113832சி], [113832டி], [113832ஈ], [113832எவ்]. [113851ஏ], [113851பி], [113872ஏ].

[113872பி], [113872சி], [113889ஏ], [113896ஏ], [113896பி], [113896சி], [113897ஏ], [113900ஏ] [113900பி], [113904ஏ], [113904பி].

[113904சி], [113907ஏ], [113907பி), [113907சி], [113909ஏ], [113924ஏ], [113924பி], [113928சி], [113934ஏ], [113951ஏ], [113952ஏ], [113952பி],

[113965ஏ], [113976ஏ]. [113983ஏ], [113983பி], [113983சி], [113983டி], [113997ஏ], [114002ஏ], [114024ஏ] [114024பி].

[114041ஏ], [114044ஏ], [114045ஏ], [114045பி], [114063ஏ], [114070ஏ], [114070பி], [114070சி], [114084ஏ], [114084பி].

(114086ஏ), (114090ஏ), (114102ஏ), (114102பி), (114113ஏ), (114134ஏ). (114163ஏ), (114163பி), (114163சி), (114163டி), (114174ஏ), (114186ஏ), (114186பி), (114213ஏ), (114220ஏ), (114221ஏ), (114237ஏ), (114237பி),

(114237சீ), (114240ஏ), (114242ஏ, (114274ஏ), (114274பி), (114274சி). (114274டி), (114274ஈ), (114275ஏ), (115776ஏ), (115776பி), (115776சி), (115776டி), (115788ஏ), (115798ஏ), (115800ஏ), (115846ஏ), (115846பி), (115865ஏ), (115884ஏ),

(115893ஏ), (115905ஏ), (115920ஏ), (115932ஏ), (115951ஏ), (115967ஏ), (115995ஏ), (114995பி), (116006ஏ), (116013ஏ), (116019ஏ), (116026ஏ), (116026பி), (116044ஏ), (116052ஏ)

[116055ஏ], [116054ஏ], [116057ஏ], [116068ஏ], [116071ஏ], [116086ஏ], [116089ஏ], [116141ஏ], [116141பி], [116141சி], [116141டி], [116141ஈ].

[116141எவ்], [116141ஜி] [116141எச்], [116141ஐ], [116141ஜே], [116141கே], [116141எல்], [116141எம்], [116151என்], [116141ஓ], [116141பி].

[116141 கியு], [116141 ஆர்], [116141 எஸ்], [116141 ரி], [116141யு], [116141 வி], [116141 டபிள்யு], [116141 எக்ஸ்], [116141வை], [116141சற்], [116167ஏ].

[116142பி], [116142சி], [116142டி], [116142ஈ], [116142எவ்], [116142ஜி], [116142எச்], [116142ஐ], [116142ஜே], [116142கே], [116142எல்], [116142எம்], [116142ஏ],

[116167பி], [116167சி], [116168ஏ], [116168 பி], [116168சி], [116168டீ], [116168ஈ], [116168எவ்], [116237 ஏ], [12681 ஏ], [12681பி], [197486ஏ],

**சாவகச்சேரி**

(114415சி), (104962ஏ), (104962பி), (107810ஏ), (107810பி), (107810சி),

**உடுவில்**

(104387ஏ), (10715ஏ), (10715பி), (10715சி), (108828ஏ), (108828பி), (108968ஏ), (108968பி), (108968சி), (108968டி), (109026ஏ), 109719ஏ),

(109728ஏ), (109728பி), (109730ஏ), (109730பி), (109760ஏ), (109760பி], (109951ஏ), (110143ஏ), (11079ஏ), (11079பி), [110948ஏ], [110978ஏ], [110978பி].

[110978சி], [110991ஏ], [110991பி], [110991சி], (110991டி), [111000ஏ), [111042ஏ] (111152ஏ), (111171ஏ), (111171பி), (111171சி), (116309ஏ), (116810ஏ).

[116810பி), [116810சி], [116810டி], [116852ஏ], [116852பி], [101427ஏ], [103721ஏ], [103721பி], (105168ஏ], [105168பி], [105168சி). [105168டி].

[105996ஏ], [105996பி),

[106149ஏ], [108939ஏ), [108939பி], [108970ஏ], [108970பி], [109016ஏ], [109016பி], [109016சி], [111708ஏ], [111708பி], [111804ஏ], [111843ஏ], [111843பி], [117843சி].

[111843டி], [111930ஏ], [111949ஏ], [112097ஏ], [112097பி], [112097சி], [112097டி], [112868ஏ], [112925ஏ], [112979ஏ] [111979பி], [112987ஏ].

[113031ஏ], [113091ஏ], [113093எவ்], (113106ஏ], [113148ஏ], [113148பி), (113158ஏ], [113160ஏ], [113182ஏ), [113188ஏ), (113188பி]. (113188சி), (1131189ஏ).

[113189பி], [113189சி], [113211ஏ], [113211பி], [114607ஏ], [114658ஏ], [114662ஏ], [114675ஏ], [114790ஏ], [114798ஏ], [114798பி], [114803ஏ], [114804ஏ].

(114821ஏ), (114854ஏ), (114854 பி), (114854 சி), (114867ஏ), (114950ஏ), (114973 ஏ), (115010 ஏ) (115025ஏ), (115046 ஏ), [117002ஏ], [117002பி], [117045ஏ].

(தொடரும்)

# அன்று ஐ.தே.கவுடன் சேர்ந்திருப்பின் இன்று நானே நாட்டின் பிரதமர்

## அஷ்ரப் கூறுகிறார்

கொழும்பு, செப். 28

1994 ஆம் ஆண்டு அரசு நிறுவ பொது மக்கள் ஐக்கிய முன்னணிக்கு நான் ஆதரவு வழங்காதிருந்தால் இன்று என்னை வசைபாடும் அமைச்சர்கள் எவரும் இருந்திருக்க முடியாது. அன்று ஐ. தே. கவுடன் நான் கூட்டணி வைத்துக் கொண்டிருந்தால் இன்று நானே நாட்டின் பிரதமர். கூச்சலிடும் அனைவரும் இதுபற்றித் தெரிந்து கொள்ளவேண்டும்.

அமைச்சர் எம். எச். எம் அஷ்ரப் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தெல்கொட விகாரை ஒன்றில் கட்டடமொன்றுக்கு அடிக்கல் நடும் விழாவின் போது அஷ்ரப் மேலும் கூறியதாவது:

சிலர் கூறுகின்றார்கள் நான் ஜனாதிபதிக்கு அழுத்தம் கொடுத்து வேலைகளைச் செய்விக்கிறேன் என்று.

எனக்கு அப்படியொரு தேவை இல்லை. அவருக்கு எவருமில்லாத நேரம் உதவிக் கரம் நீட்டியது நாங்களே. அதற்காகவே அவர் எம்மைக் கவனிக்கின்றார்.

எமது முஸ்லிம் காங்கிரஸின் சுயகௌரவத்தை மாசுபடுத்தி பொதுமக்கள்ஐக்கிய முன்னணியில் நாம் இருக்க வேண்டிய அவசியம் இல்லை. எனது அமைச்சர் பொறுப்பைத்துறந்து வெளியேற இன்றும் நான் தயார். ஆனால் ஜனாதிபதி நாட்டில் இல்லாத சந்தர்ப்பத்தில் ஒருவரின் வாய்ப்பேச்சுக்கு அஞ்சி அவ்வாறான முடிவை எடுக்க நான் தயாரில்லை. எவ்வாறாயினும் ஐ. தே. கட்சி போன்ற இனவாதக் கட்சியுடன் இணைய எமக்கு எந்தவொரு எதிர்பார்ப்பும் இல்லை.

இந்த நாட்டின் அரசமைப்பில் பௌத்த மதம் வளர்க்கப்படவேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் பௌத்த ஆட்சியாளர்களாக இருந்தும் அதனை நிறைவேற்றமுடியாதுள்ளனர்.

இலங்கை பௌத்த நாடென்றால் பௌத்த நாடாக்குவோம். அதற்கு நாமும் ஆதரவு தருவோம்.

இப்படி அஷ்ரப் கூறினார்.

(இ-8)

# அடிக்கல் நடுகை

வலி.கிழக்கு, செப். 28

கோப்பாய்பிரதேசசபைக்கு உட்பட்ட வசந்தபுரம் கிராமத்தில் ஆரம்பிக்கப்படவுள்ள வீடமைப்புத் திட்டத்துக்கு அடிக்கல் நடும் வைபவம் சமீபத்தில் இடம் பெற்றது.

[illegible] அடிக்கல்லை நட்டார்.

[க-180]

# இணுவில் கந்தசாமி கோயிலுக்கு லண்டனில் இருந்து மணி

யாழ்ப்பாணம், செப். 28

இணுவில் கந்தசுவாமி ஆலயத்துக்கு 15 லட்சம் ரூபா பெறுமதியான கோபுர வாசல் பெரிய மணி லண்டனில் இருந்து தருவிக்கப்படவுள்ளது.

இந்த மணிக்கு 10 லட்சம் ரூபாவினை லண்டனில் வாழும் இணுவில் மக்களும் எஞ்சிய நிதியினை பிற நாடுகளில் வாழும் இணுவில் மக்களும் வழங்கியுள்ளனர்.

புதிய மணிக்கான கோபுரம் பொதுமக்களின் உதவியுடன் கட்டப்பட்டு வருவதுடன் ஐந்து மாடிகளைக் கொண்ட இராஜ கோபுர வேலைகளும் நடைபெற்று வருகின்றன:

[இ-க]

# தண்ணீர் வசதி இன்றி கோப்பாய் ஆஸ்பத்திரி

கோப்பாய், செப். 28

கோப்பாய் அரசினர் வைத்திய சாலையில் அடிப்படை வசதிகள் இன்மையால் நோயாளர் வரவு பெருமளவில் வீழ்ச்சி அடைந்துள்ளது

இந்த வைத்திய சாலையில் பல இலட்சம் ரூபா செலவில் நோயாளர் விடுதி புனரமைக்கப்பட்டு நோயாளர் தங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்ட போதும் தண்ணீர் மின்சாரம் போன்ற அடிப்படை வசதிகள் இன்மையால் நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

தண்ணீர் பெறுவதாயின் அண்மையில் உள்ள குடியிருப்புக்களுக்கே அவர்கள் செல்லவேண்டியுள்ளது.

மூன்று மாதங்களுக்கு முன் நீர் இறைக்கும் இயந்திரம் திருடப்பட்டபின் தண்ணீர் விநியோகம் தடைப்பட்டுள்ளது.

இத்த வைத்தியசாலைக்கு மின்சாரம் வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

(இ-72)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மிதிவெடிகள் அகற்றும் பணி பூர்த்தி

# தொழில்நுட்பகல்லூரி மைதானம் நேற்று அதிபரிடம் கையளிப்பு

யாழ்ப்பாணம், செப். 28

மிதி வெடிகள் யாவும் அகற்றப்பட்ட பின்னர் கொக்குவில் தொழில் நுட்பக் கல்லூரி விளையாட்டு மைதானம் நேற்று வைபவ ரீதியாக கல்லூரி அதிபரிடம் ஒப்படைக்கப்பட்டது.

தொழில் நுட்பக் கல்லூரியின் அதிபர் எஸ். செந்தில்நாதன் தலைமையில் நேற்று கல்லூரியில் நடைபெற்ற இந்த வைபவத்தில் யாழ். அரசாங்க அதிபர் க. சண்முகநாதன், கண்ணிவெடியகற்றும்நிபுணர்டேவிட்டெய்லர், பிரதி திட்டமிடல் பணிப்பாளர் எஸ். பாலகிருஷ்ணன், மாகாண ஆணையாளர் ஏ.ஸி. செபநாயகம், ஐ. நா. அபிவிருத்தித் திட்ட கண்ணி வெடியகற்றும் செயற்திட்ட அலுவலர் எஸ். எல்மோ ஆனந்தராஜா உட்பட பலர் கலந்துகொண்டனர்.

[ஐ-5]

# காணாமற்போன இளைஞர் ஈ.பி.டி.பி.யில் இணைந்தார்

யாழ்ப்பாணம், செப். 28

மல்லாகம் பகுதியில் கடந்த வாரம் காணாமல்போனதாகக் கூறப்பட்ட இளைஞர் ஒருவர் ஈ.பி.டி.பி. கட்சியில் இணைந்துவிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மல்லாகம் நீதிமன்ற வீதியைச் சேர்ந்த பஞ்சலிங்கம் சுதாகரன் (வயது 18) என்பவர் காணாமற்போய்விட்டதாகக் கடந்த 24 ஆம் திகதி அவரது பெற்றோர் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்திருந்தனர்.

இந்த முறைப்பாட்டைத் தொடர்ந்து மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரிகள் இவரைத் தேடும் நடவடிக்கையில் ஈடுபட்டபொழுது குறிக்கப்பட்ட இளைஞன் தனது சொந்த விருப்பத்தின் பேரில் தமது கட்சியில் சேர்ந்துள்ளதாக ஈ.பி.டி.பி. கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் வி.கே. ஜெகன் மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்குத் தெரிவித்துள்ளதாக ஆணைக்குழு அதிகாரி கூறினார்.

(ஐ-5)

### தொழில் நுட்பக்கல்லூரிக்கு முன்பாக

# பிறவுண் வீதியில் உள்ள தடையை அகற்ற கோரிக்கை

யாழ்ப்பாணம், செப். 28

கொக்குவில் தொழில் நுட்பக் கல்லூரிக்கு முன்பாக உள்ள பிறவுண் வீதியின் தடை செய்யப்பட்டசிறு பகுதியனாது மாணவர்கள் மற்றும் உத்தியோகத்தர்களின் நன்மை கருதி திறந்து விடப்பட வேண்டும்என்று தொழில் நுட்பக்கல்லூரி அதிபர் எஸ் செந்தில்நாதன் படையதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

கலட்டிச் சந்தியிலிருந்து சுமார் 50 யார் தூரமுள்ள தொழில்நுட்பக்கல்லூரிவரையான வீதியில் புதைக்கப்பட்டிருந்த வெடிப்பொருள்கள் அகற்றப்பட்டுள்ளதால் இவ்வீதி போக்குவரத்துக்கு அனுமதிக்கப்படவேண்டும் என்றும்—

கடந்த மூன்றரை வருடங்களாக மூடப்பட்டு கிடக்கும் இவ்வீதி திறக்கப்பட்டு பஸ் சேவையும் நடத்தப் படவேண்டும். இதனால் கொக்குவில் தொழில்நுட்பக்கல்லூரி, திறந்த பல்கலைக்கழகம் ஆகியவற்றில் பயிலும் ஆயிரத்து 500க்கு மேற்பட்ட மாணவர்கள் பயனடைவார்கள் என்றும்—

அவர் தெரிவித்தார்.

இப்பாதையில் யாழ் பஸ் நிலையத்தில் இருந்து இடப்பெயர்வுக்கு முன் 808 இலக்க பஸ் சேவையை வடபிராந்திய போக்குவரத்துச் சபை நடத்தியது. மீண்டும் இப்பாதையூடாக இச் சேவை நடத்தப்பட வேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

(ஐ-5)

## கோட்டக்கல்வி அதிகாரிகள் நியமனம்

யாழ்ப்பாணம், செப். 28

தீவக வலயத்துக்குட்பட்ட நெடுந்தீவு மற்றும் ஊர்காவற்றுறைக் கல்விக் கோட்டங்களுக்கென கோட்டக் கல்வி அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

க. அரசரட்ணம் நெடுந்தீவுக் கோட்டக்கல்வி அதிகாரியாகவும் என். பரமசிவம் ஊர்காவற்றுறைக் கோட்டக்கல்வி அதிகாரியாகவும் நேற்று முதல் நியமிக்கப்பட்டுள்ளனர் என வலயக் கல்விப் பணிப்பாளர் ப. விக்கினேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

(ஐ-7)

## கண்ணி அகற்றும் பணிக்குபொறுப்பாக புதியவர் நியமனம்

யாழ்ப்பாணம், செப். 28

யாழ்ப்பாணத்தில் செயற்படும் ஐ நா. அபிவிருத்தித் திட்டத்தின் மிதிவெடியகற்றும் செயற்பாட்டு அலுவலகராக கண்ணிவெடியகற்றும் நிபுணர் எட்வேட் சார்மல்ஸ் என்பவர் பதவியேற்றுள்ளார்.

கடந்த இரண்டு வருடங்களாக இந்தப் பதவியை வகித்த டேவிட் டெய்லரின் பதவிக்கால ஒப்பந்தம் பூர்த்தியானதைத் தொடர்ந்தே இந்தப் பதவிக்கு புதிய நிபுணர் ஒருவர் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

(ஐ-5)

## இன்று சந்திப்பு

யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்துள்ள கனேடிய தூதரக அதிகாரிகள் குழு இன்று நண்பகல் 12 மணிக்கு அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளைச் சந்தித்து கலந்துரையாடவுள்ளனர்.

இச்சந்திப்பு யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைய பணிமனையில் நடைபெறும். (ஐ-5)

## ஒருங்கிணைப்புக் குழுவின் கூட்டம்

நலலூர் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நாளை மறுதினம் விபாழக்கிழமை காலை 9-30 மணிக்கு பிரதேச செயலக ஆலோசனைக் கூட்டத்தில் பிரதேச செயலர் பி. செந்தில் நந்தனன் தலைமையில் இடம்பெறவுள்ளது. (ஐ-7)

## நேர்முகப்பரீட்சை

தீவக வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளில் கற்பிக்கும் தொண்டர் ஆசிரியர்களில் இரண்டாவது தொகுதியினருக்கான நேர்முகப்பரீட்சை இன்று செவ்வாய்க்கிழமையும் நாளை புதன்கிழமையும் காலை 9-30 மணிமுதல் வேலணையில் உள்ள வலயக் கல்வி அலுவலத்தில் நடைபெறும் என வலயக்கல்விப் பணிப்பாளர் ப. விக்கினேஸ்வரன் அறிவித்துள்ளார். (ஐ-7)

# போரை நிறுத்தி ஐ.நா.தலையிட்டுடன் சமாதான தீர்வுக்கு உதவவேண்டும்

## கனடா தூதரிடம் மக்கள்குழு கோரிக்கை

யாழ்ப்பாணம், செப். 28

உடனடியாகப்போர் நிறுத்தம் செய்யப்பட்டு ஐ. நா. மத்தியஸ்தத்துடன் இனப்பிரச்சினைக்குத்தீர்வு காணப்படவேண்டும். இதற்கான முன் முயற்சிகள் எடுக்கப்படவேண்டும்.

யாழ்ப்பாணம் வந்துள்ள கனடா நாட்டுத் தூதரிடம் சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான மக்கள் குழு இவ்வாறு தெரிவித்துள்ளது.

இலங்கைக்கான கனடா நாட்டுத் தூதர் ருத் ஆக்சி பால்ட் தலைமையிலான குழுவினர் நேற்று யாழ் ஆயர் இல்லத்தில் சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான மக்கள் குழுவின் பிரதிநிதிகளைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

குடாநாட்டின் தற்போதைய நிலைமை மற்றும் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக மக்கள் குழு பிரதிநிதிகள் கனடா தூதருக்கு விளக்கிக் கூறினர்.

அவர்கள் அங்கு தெரிவித்ததாவது:-

அரசின் நடவடிக்கைகள் காரணமாக தமிழ் மக்கள் அதன் மீது நம்பிக்கைஇழந்துவிட்டனர். தொடரும் மனித கொலைகளை முடிவுக்குக் கொண்டுவரும் வகையில் உடனடியாக யுத்த நிறுத்தத்தை ஏற்படுத்தி பேச்சுவார்த்தைக்கான முன்முயற்சிகளை ஆரம்பிப்பதன் மூலமே அரசுமீண்டும் தமிழ் மக்களின் நம்பிக்கையைப் பெற முடியும்.

ஐ. நா. சபை இந்த விவகாரத்தில் தலையிட்டு நியாயமான தீர்வு ஒன்றை ஏற்படுத்த உதவவேண்டும்.

குடாநாட்டில் அமுலில் உள்ள போக்குவரத்துத் தடை, மீன்பிடித் தடை, குடியிருப்புத்தடை உட்பட அனைத்து தடைகள், கட்டுப்பாடுகளை நீக்கவேண்டும்.

இவ்வாறு மக்கள்குழு பிரதிநிதிகள் கனடா தூதரக குழுவினரிடம் தெரிவித்தனர்.

இச்சந்திப்பில் சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான மக்கள் குழுவின் சார்பில் யாழ். ஆயர் அதி. வண. தோமஸ் சௌந்தரநாயகம், துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை, நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள், ஆயர் இல்ல குரு முதல்வர் வணபிதா செல்வராசா, வணபிதா பேர்ணாட், சு. பரமநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## தமிழ் வர்த்தகரிடம் தங்க நாணயங்கள்

கொழும்பு, செப் 28

கொழும்பு செட்டித்தெருவில் உள்ள தமிழ் வர்த்தகர் ஒருவரது நகைக் கடையில் இருந்து 13 இலட்சம் ரூபா பெறுமதியான தங்கம் மற்றும் தங்க நாணயங்களையும் 3 இலட்சம் ரூபா பெறுமதியான வெளிநாட்டு நாணயங்களையும் பொலீஸார் கைப்பற்றியுள்ளனர்.

கடையில் சோதனை நடத்திய பொலீஸார் அங்கிருந்து 15 தங்கக் கட்டிகளையும் 35 தங்க நாணயங்களையும் 3 இலட்சம் ரூபா பெறுமதியான அமெரிக்கா, ஜேர்மனி, இந்தியா, சவுதிஅரேபியா ஆகிய நாடுகளின் நாணயங்களையும் கைப்பற்றினர்.

சட்ட விரோதமான முறையில் தங்கத்தையும் வெளிநாட்டு நாணயங்களையும் வைத்திருந்ததால் அவை பறிமுதல் செய்யப்பட்டன என்றும்—

இன்று அவை அனைத்தும் சுங்கத்திணைக்கள அதிகாரிகளிடம் வழங்கப்படும் எனவும் பொலீஸார் தெரிவித்தனர். (இ6-21)

## அதிபரின் அகவை விழா

யாழ்ப்பாணம், செப். 28

யாழ். மத்திய கல்லூரி அதிபர் க. இராசதுரையின் 52 ஆவது அகவை விழா இன்று செவ்வாய்க் கிழமை காலை 9-00 மணிக்கு கல்லூரியின் தம்பர் மண்டபத்தில் உப அதிபர் எல். ஓங்காரமூர்த்தி தலைமையில் நடைபெறவுள்ளது.

விழா நாயகருக்கான வாழ்த்துப்பாவை மகாவித்துவான் இணுவையூர் வீரமணி ஐயர் வாசிப்பார். வாழ்த்துப் பாவின் ஒலி நாடாவை திருமதி ஆர். பாலசுந்தரம் பிள்ளை வெளியிட்டு வைப்பார்.

தொடர்ந்து விழாநாயகர் பொன்னாடை போர்த்தி தங்கப்பதக்கம் சூட்டிக் கௌரவிக்கப்படுவார். பின்னர் மத்திய கல்லூரியின் உப அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் விழாநாயகரை மாலை அணிவித்தும் வாழ்த்துரைகள் வழங்கியும் கௌரவிப்பர். (ஐ 7)

## வினாடி வினா இறுதிப் போட்டி

யாழ்ப்பாணம், செப். 28

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி வணிக மன்றத்தால் ஏற்பாடு செய்யப்பட்டு பாடசாலை மாணவ மாணவிகளுக்கு இடையில் நடத்தப்பட்டு வந்த வினாடி வினாப் போட்டியின் இறுதிநாள் நிகழ்வுகள் இன்று மத்திய கல்லூரி தம்பர் மண்டபத்தில் நடைபெறும்.

காலை 9 மணிக்கு ஆரம்பமாக உள்ள அரையிறுதிப் போட்டியில் மூன்று இணைக் குழுக்கள் ஒன்பது சுற்றுகளில் பங்குபற்ற உள்ளன. (ஐ-7)

# உதைபந்தாட்டப் போட்டிகள்

யாழ்ப்பாணம், செப். 28

தென்மராட்சி கல்விவலய பாடசாலைகளுக்கு இடையேயான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதி ஆட்டங்கள் இன்று பிற்பகல் 2-30 மணி முதல் சாவகச்சேரி நகர சபை மைதானத்தில் நடைபெறவுள்ளன.

தென்மராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் திரு. மு.வ. செல்வராசா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக மாகாணக் கல்வி, பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை அமைச்சின் செயலாளர் சுந்தரம் டிவகலாலா கலந்து கொள்கிறார்.

இந்த இறுதிப் போட்டியில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு;-

★ 16 வயதுப் பிரிவு:- மீசாலை விக்னேஸ்வரா வித்தியாலயம் எதிர் டிறிபேக் கல்லூரி.

★ 18 வயதுப் பிரிவு:- டிறிபேக் கல்லூரி எதிர் கைதடி முத்துக்குமாரசாமி ம. வி.

(உ-ரி-133)

★ ★ ★

வடமராட்சிக கல்வீ வலயப் பாடசாலைகளுக்கு இடையே லீக் முறையில் நடைபெற்று வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் பற்றிய விவரம் வருமாறு:-

16 வயதுப் பிரிவு

★ வேலாயுதம் ம.வி. எதிர் தேவரையாளி இந்து (நெல்லியடி ம.ம வி. மைதானம்)

★ சிவப்பிரகாசம் ம. வி. எதிர் கரணவாய் பொன்னம்பலம் ம. வி. (திக்கம் மைதானம்)

18 வயதுப் பிரிவு

★ தேவரையாளி இந்து எதிர் வேலாயுதம் ம. வி. (நெல்லியடி ம.ம.வி. மைதானம்)

★ கம்பர்மலை அ. த. பாடசாலை எதிர் யா/உடுப்பிட்டி அ. மி. த. க. பாடசாலை (திக்கம் மைதானம்)

(உ-ரி)

★ ★ ★

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம் ஈ. ஆர். போக்குவரத்துச்சேவை ஆதரவுடனும் பருத்தித்துறை உதைபந்தாட்டச் சங்கத்தின் அனுசரணையுடனும் வடமராட்சி ரீதியில் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று மாலை திக்கம்முனை மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

★ பொலிகை பாரதி வி. க. எதிர் அல்வாய் நண்பர்கள் வி. க.

★ விக்கிரமன்ஸ் வி. க. எதிர் உதயதாரகை வி. க.

(உ-ரி)

★ ★ ★

யாழ். உதைபந்தாட்ட லீக் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையே நடத்தும் லீக் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று யாழ் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் பற்றிய விவரம் வருமாறு:-

★ மாலை 4 மணிக்கு — ஆனைக்கோட்டை யூனியன் வி. க. எதிர் ஈச்சமோட்டை வி. க.

★ மாலை 5 மணிக்கு — கிறீன்பீல்ட் வி. க. எதிர் பாரதி வி. க. (உ-ரி)

★ ★ ★

தென்மராட்சி, செப். 28

தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையே நடைபெற்று வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதி ஆட்டங்கள் இன்று சாவகச்சேரி நகர சபை மைதானத்தில் இடம் பெற உள்ளன.

16 வயதுப்பிரிவில் மீசாலை விக்கினேஸ்வரா வித்தியாலய அணியை எதிர்த்து சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி அணியும் —

18 வயதுப் பிரிவில் டிறிபேக் கல்லூரி அணியை எதிர்த்து கைதடி முத்துக்குமாரசாமி மகா வித்தியாலய அணியும் மோத உள்ளன.

(உ-ரி)

## கபடி ஆட்டத்தில் இலங்கை அணி முனனணியில்

காட்மண்டு, செப். 28

காட்மண்டுவில் நடைபெறும் எட்டாவது தெற்கு ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் நேற்று நடைபெற்ற கபடி ஆட்டத்தில் இலங்கை அணி நேபாள அணியை 25 க்கு 6 என்னும் புள்ளிகள் வித்தியாசத்தில் வென்றது

இன்று இடம்பெற உள்ள மற்றுமோர் ஆட்டத்தில் இந்திய அணியை எதிர்த்தும் மாலையில் பங்களாதேஷ் அணியை எதிர்த்தும் இலங்கை அணி விளையாடவுள்ளது.

நடந்து முடிந்த முதலாவது ஆட்டத்தில் இலங்கை அணி வென்றதன் மூலம் போட்டியில் முன்னணியில் உள்ளது. ((ஐ-ரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org